விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23.10.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 308

# பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு திருமலையில் எழுச்சிப் பிரகடனம் வெளியீடு

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வு திருகோணமலையில் உட்துறைமுக வீதியில் உள்ள இளையோர் விளையாட்டுத் திடலில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரர் லெப்.தர்மராஜாவின் தந்தை அன்ரனித் ஏற்றிவைத்தார். முதன்மைச் சுடரினை திருமலை பத்திரகாளியம்மன் கோவில் முதன்மைக் குரு ஸ்ரீ சோ.இரவிசங்கரக்குருக்கள் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் மேஜர் கஜேந்திரனின் தந்தை ந.சிங்காரவேலன் ஏற்றிவைத்தார். ரவிச்சந்திரக் குருக்கள், அருட் தந்தை சி.வி.அன்ரனீஸ், மௌலவி சாகுல் ஹமீத் ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்தினர்.

தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வின் செயற்பாட்டுக் குழுத் தலைவர் கே.தங்கராஜா தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.தங்கேஸ்வரி, கே.பத்மநாதன், என்.ரவிராஜ், கே.துரைரட்ணசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், இரா.சம்பந்தன் உள்ளிட்டோர் உரையாற்றினர். மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான கே.சிவபாலன் பிற்பகல் ஒரு மணிக்கு தமிழீழத் தேசிய எழுச்சிப் பிரகடனத்தை வாசித்தார்.

இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்கும் பாரிய எழுச்சி நிகழ்வில் பேரினவாதிகள் சதிச்செயலை நிறைவேற்றக்கூடும் என்ற அச்சத்தில் கூடுதல் பாதுகாப்பு கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் எந்தவொரு இராணுவமோ, பொலிஸாரோ விழா நிகழ்வுப் பகுதியில் நிறுத்தப்படவில்லை. கோரமங்கடவல விகாரையின் பிக்குவும் இந்நிகழ்வில் பங்கேற்று தமிழ்மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகள் பற்றி உரையாற்றினார்.

நிகழ்வில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலைத் தலைவர் ஆர்தர் டீ வெட்டின் தலைமையிலான குழுவினரும் பங்கேற்று நிலைமைகளை அவதானித்தனர். (ச)



# விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கவேண்டும்

## பரந்தனில் விபத்து நீர்வேலி இளைஞன் பலி

(கிளிநொச்சி)

ஆனையிறவு மற்றும் பரந்தன் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். பரந்தனில் நடைபெற்ற விபத்தில் நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி விநோத்ராம் (வயது 23) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

பரந்தனுக்கும் உமையாள்புரத்துக்கும் இடையே நேற்று நண்பகல் பிரஸ்தாப இளைஞர் நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது பின்புறமாக வந்த வாகனம் மோதியதால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலைப் பிரகடனத்தில் வலியுறுத்தல்

(நமது நிருபர்)

தமிழ்பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு, மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் - எமது இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டுமெனவும், விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை நீக்கவேண்டுமெனவும் நேற்று திருகோணமலையில் வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை செல்லும் வாக்காளர்கள் சோதனை செய்யப்படமாட்டார்கள்

### வன்னி இராணுவத் தளபதி உறுதியளிப்பு

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலின்போது இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து ஓமந்தை வாக்குச்சாவடிக்கு வாக்களிக்கவரும் வாக்காளர்கள் எந்தவிதமான சோதனைக்கும் உட்படுத்தப் படமாட்டார்கள் என வன்னிமாவட்ட கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளதாக வவுனியாத் தேர்தல் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்குமான சந்திப்பு வவுனியா இராணுவத் தலைமையலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது தேர்தல் சட்டதிட்டங்களை தேர்தல் உதவி ஆணையாளர் விளக்கியிருந்தார்.

வன்னிப் பிரதேச வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி முறையில் வவுனியா மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன.

கடந்தமுறை நடைபெற்ற பொதுத் தேர்தல் எவ்வாறு நடைபெற்றதோ அதே விதத்தில் முல்லைத்தீவு மாவட்ட வாக்குச் சாவடிகள் கொத்தணி முறையில் அமைக்கப்படும்.

ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து எந்தவித சோதனையுமின்றி வாக்காளர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் பஸ்கள் மூலம் வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துவரப்படுவார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண இராணுவத் தளபதியுடன் மீனவப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலான இராணுவ அதிகாரிகளும் வடபிராந்திய கடற்படைத் தளபதி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்துறை அதிகாரி, மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசம் மற்றும் சம்மேளனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வடமராட்சிப் பகுதியில் இதுவரையில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இராணுவத்தினரிடம் பாஸ் அனுமதிபெற்று கடலுக்குள் சென்றுவருவதாகவும் இன்னும் 1800 பேர் பாஸ் நடைமுறையினை பின்பற்றாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய இராணுவ அதிகாரிகள், மீனவர்கள் அனைவரும் பாஸ் நடைமுறையினை பின்பற்றுவதற்கு மீனவ சங்கப் பிரதிநிதிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் மீனவர்கள் இப்பாஸ் நடைமுறையினை முழுமையாக அகற்றவேண்டுமென்று தங்களிடம் கோரியிருப்பதாகவும், ஆகவே மீனவர்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இந்த நடைமுறையினை நீக்கவேண்டுமென்று மீனவ சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

தொழிலுக்காக இரவில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் விடிந்தபின்பே கரைக்குத் திரும்பவேண்டும் என்ற நடைமுறையினை நீக்கி மீன்பிடித்த உடனேயே மீனவர்கள் கரைக்குத் திரும்புவதற்குரிய வசதிசெய்யவேண்டுமென்றும் மீனவர்கள் தரப்பில் இச்சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices
Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# விழிப்பின் பதிவுகள்

வலம்புரி

# கைநழுவும் சமாதானம்

இந்த நாட்டிற்கு மிகவும் அவசியமான சமாதானமானது சகலராலும் வசதியாக மறக்கப்பட்டுள்ளது என்றே தோன்றுகிறது. மிக நீண்டகால இழுத்தடிப்புகளின் பின்னர் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி துணிந்து மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையானது சமாதானத்துக்காக ஏங்கிய மக்களின் மனங்களில் பெரும் நம்பிக்கையை ஊட்டியது. இந்த விடயத்தில் கடந்தகால அரசியல்வாதிகளைப் போல் அல்லாது அன்றைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட இவ்வொப்பந்தமானது இன்று வரை போரை தடுத்து ஆயிரக்கணக்கான உயிர்களை பாதுகாத்துள்ளது என்பதை மறுக்க முடியாது. எனினும் அதன் பின்னர் ஏற்பட்ட முன்னேற்றங்கள் எவை என பார்க்கின்ற போது எதுவும் இல்லையென்றே கூறமுடியும். பல்வேறு நாடுகளில் பேச்சுக்கள் இடம்பெற்ற போதும், ஒஸ்லோவில் பிரகடனம் ஒன்றை வெளியிட்டதைத் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியவில்லை. குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது அமர்வுகளில் புலிகளை அரவணைத்து செல்ல முடியாத காரணத்தினால் நிலமைகள் மோசமானது. அதன் காரணமாக பேச்சுக்கள் இடைநடுவில் முடிந்து போயின. அதன் பின்னர் இன்றுவரையில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமை ஒருபுறமிருக்க நிலமை, பின்னோக்கி நகரத் தொடங்கியுள்ளது. வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. இரு தரப்பிலும் மாறிமாறி படுகொலைகள் இடம் பெறுவதன் மூலம் போர் அண்மிப்பதுபோல் தெரிகிறது.



விஷேடமாக தற்போதைய அரசாங்கமானது போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலம் ஏற்பட்ட தற்காலிக சமாதான சூழலை மேலும் பலப்படுத்தி நம்பிக்கையை மேலும் வளர்க்கத் தவறியுள்ளது. இதன் மூலம் தற்போது அச்சமும் அவநம்பிக்கையும் கலந்த சூழல் ஏற்பட்டுள்ளது. சர்வதேச அழுத்தம் மாத்திரம் இல்லையானால் இலங்கையில் மீண்டும் போர் எப்போதோ தோன்றியிருக்கும்.

**- என். ஜீவேந்திரன்**

போர் நிறுத்த உடன்படிக்கையானது புலிகளுக்கு தன் நாட்டை வழங்கப்போவதாக கூறி சந்திரிக்கா அம்மையார் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினை கலைத்தார். ஜே.வி.பி. யினுடன் அம்மையாரின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட்டினை ஏற்படுத்தி, நாடு முழுவதும் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக மக்களின் உணர்வுகளை தூண்டிவிடும் பிரச்சாரங்கள் இடம்பெற்றன. ஜே.வி.பியானது மிக மோசமான இனவாத நச்சு விதைகளை நாடு முழுவதும் விதைத்தது. இறுதியில் எதிர்பார்த்ததை போலவே அவர்களால் ஆட்சியை பிடிக்க முடிந்தது.

எனினும், இந்த அரசாங்கமானது தேர்தல் பிரசாரத்தில் கூறியபடி போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, சந்திரிக்கா அம்மையாரும் அவரது அரசாங்கத்தின் சரத் அமுனுகம போன்ற அமைச்சர்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையை வரவேற்றதுடன் அதைத் தொடர்ந்து பேணுவதனை உறுதிப்படுத்தினர்.

போர் நிறுத்த உடன்படிக்கை ஓரளவு பேணப்பட்டாலும் கூட அதிலிருந்து எவ்வித முன்னேற்றத்தையும் அவர்களால் காண முடியவில்லை. இந்த ஒன்றரை வருட கால ஆட்சியில் நிலமை மேலும் மேலும் மோசமாகியதன் விளைவாக பல உயிர்கள் பலிகொள்ளப்பட்டன.

இன்று சமாதானம் குறித்து சிந்திக்கக் கூட ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் நேரமில்லை. காரணம் ஜனாதிபதி தேர்தல். இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இரு பிரதான கட்சிகளும் களத்தில் இறங்கியுள்ளன.

தாம் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதை மேடைக்கு மேடை வாக்குறுதிகளாக முழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன. ஆளுக்கு ஆள் சேறு பூசுகிறார்கள் ஊடகங்களும், தமக்கு தமக்கு சார்பான வேற்பாளர்களுக்கு வக்காளத்து வாங்கிக்கொண்டிருக்கின்றன.

இவர்கள் அனைவருமே இந்த நாட்டிற்கு அவசியமான சமாதானத்தை வசதியாக மறந்துள்ளனர். நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மறந்துள்ளனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தியினை மறந்துள்ளனர். மீண்டுமொரு போரை தவிர்ப்பதற்கு அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பேச்சுக்களின் அவசியத்தை மறந்துள்ளனர்.

இதன் காரணமாக 60 வருடங்களுக்கு மேலான இனப்பிரச்சினைக்கும், சுமார் 20 வருடங்களுக்கும் மேலான கொடிய யுத்தத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க கைகூடிய வந்த வாய்ப்பும் நழுவி செல்லக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் கூட இது போன்ற அரிய வாய்ப்புகள் கைநழுவவிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக நாடு பாரிய அழிவை சந்தித்தது. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. மக்கள் மேலும் மேலும் வறுமைக்குள் சிக்கியுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக சமாதான தீர்வுக்கான வாய்ப்புகளை உதாசீனம் செய்கின்ற அரசியல் வாதிகள் மீண்டும் மீண்டும் அந்த தவறை செய்வதானது இந்த நாட்டிற்கு அவர்கள் செய்கின்ற தேசத்துரோகமாகவே வரலாறு கூறப்போகிறது. எனவே, இம்முறையும் அத்தகைய துரோகம் இழைக்கப்படக்கூடாது என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாகும்.

# சுதந்திரமிழந்து வரும் ஊடகத்துறை...

ஊடகமானது ஒரு நாட்டின் ஆட்சியைக்கூட தீர்மானிக்க கூடிய வலிமை கொண்டது. அவை சுதந்திரமான இயங்குவதே அந்த நாட்டில் ஜனநாயகம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சியாகும். தற்போது நடை முறையிலுள்ள இலங்கை சோஷலிச குடியரசு அரசியல் யாப்பும் கூட ஊடகங்களின் சுதந்திரத்தினை உறுதிப் படுத்தியுள்ளது. எனினும் அவை தமது கடமையை சுதந்திரமாக செய்ய முடியாத சூழலே இன்று காணப்படுகிறது. உண்மை நிலையினை மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய தார்மீக பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஊடகத்துறையானது பல சவால்களுக்கு காலங்காலமாக முகங் கொடுத்து வருகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனையில் சிக்கி அதிலிருந்து வெளிவரும் ஊடகவியலாளர்களும் இனவாதத்தையே பெரிதும் ஊடகங்களில் வெளிப்படுத்துகின்றனர். எனினும் நியாயமான ஊடக செயற்பாடு அற்றுப்போவதற்கு வேறு பல காரணங்களும் உள்ளன. அரசியல்வாதிகளின் தலையீடு, துவேசமான ஊடகவியலாளர்களின் போக்கு நேர்மையான ஊடகவியலாளர்களின் படுகொலைகள், போன்றன சில காரணங்களாகும்.

அண்மைக்காலங்களில் ஊடகத்துறை மீதான தாக்குதல்கள் மிகவும் அதிகரித்த வண்ணமுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் சண்டேலீடர் பத்திரிகை அச்சகத்திற்குள் நுழைந்த கும்பல்கள் பெருந்தொகையான பத்திரிகைகளை தீயிட்டு கொளுத்தியதுடன், தளபாடங்களையும் சேதப்படுத்தியமையானது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அத்தோடு கடந்த ஓகஸ்ட் மாதம் சுடர்ஒளி பத்திரிகை மீதான குண்டு வெடிப்பு நிகழ்வின் போது ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஜே.வி.பியின் கூட்டத்திற்கு செய்தி சேகரிக்க சென்ற செய்தியாளர் தாக்கப்பட்டமை, அப்பத்திரிகை சார்ந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை, என்பன இன்றைய ஊடக சுதந்திரத்தின் நிலையை சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் சில அரசியல்வாதிகள் கூட ஊடகத்துறை மீதான தமது அதிருப்தியை நேரடியாக தரங்கெட்ட விதத்தில் வெளிப்படுத்த துணிந்துவிட்டனர். இதனை பிரதியமைச்சர் ஒருவரால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட விடயங்கள் உணர்த்துகின்றன. இந்நிகழ்வுகள் ஊடகங்களை ஆட்சியில் உள்ளவர்களே மதிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமன்றி தமது உயிரை துச்சமென மதித்து பல கருத்துக்களை உலகிற்கு அறியத்தந்த பல ஊடகவியலாளர்களை நாம் இழந்திருக்கிறோம். நிமலராஜன் உட்பட படுகொலை செய்யப்பட்ட சிவராம் வரை இந்தப்பட்டியல் தொடர்கின்றது. இந்நிலையில் நிஜத்தை வெளிக்கொணரத் துடிக்கும் ஊடகத்துறையின் கைகளானது அரசியல் என்ற கயிற்றின் பிடியில் சிக்கித் தவிக்கிறது.

மேலும் ஊடகங்கள் அதிகார வர்க்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டால் தமது உயிருக்கு ஆபத்து என்பதால் நிழலை நிஜமாக்கும் கட்டாய நிலையிலேயே ஊடகங்கள் செயற்படுகின்றன. இந்த ஊடகத்துறைக்கு எதிரான வன்முறைகளில் அரசும், [illegible] ஆயுதமேந்திய குழுக்களும் விதிவிலக்கல்ல.

**- எஸ். கிருபாலினி**

தம்மீதான வண்டவாளங்களை ஊடகங்கள் வெளிக்கொணரும் பட்சத்தில் அரசியல்வாதிகள் தமது அரசியல் வாழ்க்கைக்கு முடிவு வந்துவிடுமோ என்ற பயத்தில் ஊடகங்கள் மீதான வெறுப்பை மேடை போட்டும் கிழிப்பதுண்டு. இவற்றுக்கு அரச ஊடகங்கள் மட்டுமல்ல தனியார் ஊடகங்களும் இலக்காகின்றன.

இன்று மக்கள் ஜனாதிபதி தேர்தலை சந்தித்துள்ளனர். இந்நிலையில் ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். ஆனால் ஒவ்வொரு ஊடகங்களும் தமக்கு சார்பான கட்சிகள் குறித்தே அதிகம் கவனம் செலுத்த தொடங்கியுள்ளன. தமது கருத்துக்களை மக்கள் மீது திணிக்க ஊடகங்கள் ஆரம்பித்துவிட்டன. அரச சார் ஊடகங்கள் அரசிற்கு சார்பான தகவல்களையே வழங்கி வருவதோடு. பெரும்பாலான தனியார் ஊடகங்களும் பக்கச்சார்பாக பணியாற்றுகின்றன. இதனால் நடுநிலையாக கருத்து தெரிவிக்கும் எந்த ஊடகத்தையும் எம்மால் காண முடியாதுள்ளது.

எமது கடந்த கால வரலாற்றை எடுத்து பார்த்தால் இனப்பிரச்சினை தொடர்பில் எந்தவொரு ஊடகமும் நடுநிலையாக தமது பணியை செய்யவில்லை. குறிப்பாக சிங்கள ஊடகங்கள் தமிழர்களுக்கு எதிராகவும், தமிழ் ஊடகங்கள் சிங்களவர்களுக்கு எதிராகவும் கருத்துக்களை கூறிவரும் போக்கும் காலங்காலமாக அதிகரித்து வருகின்றது. ஊடகங்கள் அது தமிழ் ஊடகம் என்றாலும் சரி, சிங்கள ஊடகம் என்றாலும் சரி தமது இனம் சார் தவறுகளை சுட்டிக் காட்டுவதில்லை. மாறாக பிற இனத்தை காட்டமாக வர்ணிப்பதன் மூலம் சந்தையில் முன்னணி வகிப்பதே ஊடகங்களின் இன்றைய முக்கிய நோக்கமாக காணப்படுகின்றது. இதற்காக இன்றைய ஊடகங்கள் யாரையும் சாடவும், இனவன்முறைகளை அதிகரிப்பதற்கான கருத்துக்களை . வெளியிடுவதற்கும் தயங்குவதில்லை என்பதை மறுக்க முடியாது.

யுத்தகாலத்தின் போது யுத்த நடவடிக்கைகள் குறித்த உண்மை நிலையினை வெளியிட முடியாத நிலையில் ஊடகங்கள் காணப்பட்டன. இருந்தாலும் கூட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னர் இந்நிலை சற்றே மாறியுள்ளது. ஆனாலும் முற்று முழுதான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த வருடத்தில் மட்டும் குறைந்தது நான்கிற்கு மேற்பட்ட ஊடகத்துறை, ஊடகவியலளார்சார் வன்முறைகள் நடைபெற்றுள்ளன. (இவ்வாண்டு முடிவடையவில்லை என்பதை கருத்திற் கொள்க) இது போன்ற இன்னும் எவ்வளவு வன்முறைகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளதோ என ஊடகத்துறை சார்ந்தோர் அச்சம் கொண்டுள்ளனர்.

புதியதொரு ஜனாதிபதி நாட்டில் தோன்றவுள்ள நிலையில் இந்த தலைவராவது சுதந்திரமானதும், நடுநிலையானதுமான ஊடகத்துறையை நாட்டில் வளர்க்க பாடுபடுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# கிழக்கு நோக்கி தெற்கு ஊடகவியலாளர்கள்

இனப்பிரச்சினையின் ஆரம்பத்தோடு திருமலை மாவட்டத்தினுள் அமைதியாக வாழ்ந்த இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டதோடு வன்முறைகள் அதிகமாக ஏற்பட்ட பிரதேசங்களின் பட்டியலில் திருமலையும் முக்கிய இடத்தை பிடித்துக் கொண்டது. அழகையும் பெருமையையும் கொண்ட திருமலை மாவட்டத்தின் பல பகுதிகள் இவ்வன்முறை காலத்தையடுத்து இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு பிரதேசமாக மாற்றப்பட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளை முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.

இலங்கையில் இனப்பிரச்சினை துளிர்விடத் தொடங்கிய காலப்பகுதியிலிருந்தே திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் கிழக்கில், குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டமை எமக்கு தெரியும். அதன் பின் ராணுவ பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட பல தமிழ்க்கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதோடு அக்கிராமங்களின் பெயர்கள் கூட மருவி சிங்கள மொழிப்பெயர்களாகி விட்டன. பதவிற்குளமானது பதிவிய எனவும், சிரிப்புரம் சிறிபுர எனவும் அழைக்கப்படுவது இதற்கு சிறந்த சிறு உதாரணங்களாகும்.

கடந்த யுத்த நிறுத்த காலப்பகுதியில் கூட பல வன்முறைச் சம்பவங்கள் திருகோணமலையில் ஏற்பட்டுள்ளன. மூதூர் வன்முறைகள், குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் தொடக்கம் அண்மையில் உருவான புத்தர் சிலை சர்ச்சை வரை திருகோணமலை பதற்றத்துக்குரிய ஒரு பிராந்தியமாகவே காணப்பட்டு வருகிறது. எனவே நாட்டின் இனப்பிரச்சினையுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்ட திருகோணமலை

**- ருவனி**

மாவட்டத்திற்கு, தெற்கைச்சேர்ந்த ஊடகவியலாளர் குழு இம்மாதம் 7ஆம் திகதி சென்றிருந்தது. இந்த 5 நாள் விஜயத்தில் ஊடகவியலாளர்கள் திருமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று மக்களுடன் அளவளாவி அவர்களது பிரச்சினைகளையும் அப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கேட்டறிந்து கொண்டனர். தெற்கைச் சேர்ந்த சிங்கள ஊடகவியலாளர்களிடம் தமது குறைகளையும் பிரச்சினைகளையும் கலந்துரையாடியது இப்பகுதிவாழ் மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. தேசிய சமாதான பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விஜயத்தில் தெற்கைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட சிங்கள தமிழ் ஊடகவியாளர்கள் பங்கு கொண்டனர். திருகோணமலை நகரத்திற்கு மட்டுமன்றி குச்சவெளி, கிண்ணியா போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் சென்ற இவர்கள் அப்பிரதேச மக்களது பிரச்சினைகளை தெரிந்து கொண்டதோடு தாம் கொண்டு சென்ற பாடசாலை உபகரணங்களையும் அப்பிரதேச சிறார்களுக்கு வழங்கினர்.




இந்த பயணத்தின் ஊடாக அடிக்கடி பதற்றநிலை தோன்றுகின்ற ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற பல்லின சமூகங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஊடகவியலாளர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான மனோநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு வடகிழக்கின் யதார்த்த நிலை குறித்த விழிப்புணர்வுடன் தெற்கு ஊடகவியலாளர்கள் தமது ஆக்கங்களை உருவாக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை இந்தப்பயணம் அவர்களுக்குள் ஏற்படுத்தியிருக்கும் என நம்பலாம்.


**இவ்வார விழிப்பில்...**

- மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்
- ஊடகவியலாளர்களின் திருமலை விஜயம்
- சமாதான பாதையில் பெண்கள்
- புதிய யுகத்திற்கான இளைஞர்கள்
- அரச படையின் 56ஆம் ஆண்டுவிழா


விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை. பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகத்தில் வசிக்க முடியுமா?



செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் துல்லியமாக எடுக்கப்பட்ட பாறை.

சந்திரனை வர்ணித்து பாடாத கவிஞர்களே இல்லை. சந்திரனை வர்ணித்துப் பாடியது எல்லாம் அந்தக் காலம். அதுவும் உண்மை என்ற நிலை வெகுவிரைவில் வரப்போகிறது. சந்திரன் மட்டும் அல்ல செவ்வாய்க் கிரகத்திலும் மனிதனால் வாழமுடியுமா? என்று நாசா விண்வெளி நிலையம் ஆராய்ந்து வருகிறது.

விண்வெளிப் பயணங்கள் இன்று சர்வ சாதாரணமாக மாறிவிட்டது. முதன் முதலாக பூமியின் துணைக்கோளான சந்திரனில் நீல் ஆம்ஸ்ட்ரோங் காலடி எடுத்து வைத்தார். அன்றைய தினம் அதை உலகமே வியந்து பாராட்டியது. தற்போது அதை எல்லாம் கடந்து செவ்வாய்க் கிரகத்தில் மனிதனால் வாழ முடியுமா? என்ற ஆராய்ச்சி நடந்துவருகிறது.

நாம் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு சென்றால் அங்குள்ள சீதோஷ்ணநிலை நமக்கு ஒத்துக்கொள்வது இல்லை. அப்படி இருக்க விண்வெளி கிரகங்கள் எல்லாம் வேறு ஒரு உலகம். மனிதன் இதுவரை அனுபவிக்காத சீதோஷ்ண நிலையைச் சந்திக்கிறான்.

1960ஆம் ஆண்டு அப்போலோ விண்கலம் சந்திரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது மிகப்பெரிய சவாலாக இருந்தது. தற்போது நாசா ஆர்ராய்ச்சிக் கழகம் சந்திரனுக்கு 4 விண்வெளி வீரர்களையும் செவ்வாய்க்கிரகத்திற்கு 6 விண்வெளி வீரர்களையும் 2ஆயிரத்து 20 ஆம் ஆண்டுக்குள் ஆராய்ச்சிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையிலான கட்டடம், மின்சாரம், தகவல் தொடர்பு சாதனங்கள், தண்ணீர் மற்றும் எரிசக்தி இவற்றை சந்திரனில் உருவாக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ச்சி செய்கின்றனர். 3 கோடியே 50 இலட்சம் மைல்கள் தொலைவுகளுக்கப்பால் உள்ள செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்துள்ளனவா? என்பது பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

2020ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகம் மற்றும் சந்திரனுக்குச் சென்று வரு வதற்கான நாசாவின் திட்டத்தை 2004ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்தார். இதற்கான செலவு எவ்வளவு தெரியுமா? 9 இலட்சம் கோடிகளைத் தாண்டுகிறது!.

நாசா பொறியியலாளர்கள் கூம்பு வடிவ CEV (Crew Exploration Vechile) என்ற விண்கலத்தை ஆண்டிற்கு இரண்டு முறை விண்நிலையத்திற்கு சென்று வரும் வகையில் வடிவமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நிலவிற்கு 4 விண்வெளி வீரர்களையும் செவ்வாய்க் கிரகத்திற்கு 6 விண்வெளி வீரர்களையும் கொண்டு செல்லும். மேலும் விண்வெளி நிலையத்திற்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் தன்மை கொண்டது. இதற்காக லாக்ஹீட் மார்டின் மற்றும் நார்த்ரோப் க்ரெம்மென் போயிங் குழுவிற்கு 28 மில்லியன் டொலர்கள் ஒதுககப்பட்டது. இந்த CEV விண்கலம் அப்போலோவைப் போல் இருந்தாலும் அதைவிடப் பெரியது.



விண்வெளி வீரர் சார்லஸ் கான்ராட் அப்போலோ-12இல் சென்று சந்திரனில் காலடி வைத்தபோது எடுக்கப்பட்ட படம். அவரது வலது கையில் இருப்பது நிலவில் பயனபடுத்தும் கை இடுக்கி.



1969ஆம் ஆண்டு விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங், மைக கோல்காஸ்பின்ஸ் மற்றும் எட்வின் இ.ஆல்ட்சின் ஆகியோரை சநதிரனுக்கு காலடி எடுத்துவைக்க அழைத்துச் செல்லும் அப்போலோ-11 சாட்டர்ன் V.

இதனுடைய விண்வெளிப்பாதை மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறும், இடையூறுகளைக் குறைக்கும் விதமாகவும் பசுபிக் பெருங்கடலின் விண்வெளியில் இருக்கும். ஏதாவது கோளாறு ஏற்பட்டாலும் கடலில் இறங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

CEV விண்கலம் விரிவடையும் தன்மை கொண்ட உஷ்ண தாங்கிகளைக கொண்டது. இதனால் இதனை விண்வெளிக்கு அனுப்பி 10 முறை மறு உபயோகப்படுத்த முடியும். மேலும் நாசா பொறியியலாளர்கள் விண்வெளி வீரர்கள் நிலவில் இறங்குவதற்காக சந்திரனின் சுற்றுப் பாதையில் இருந்து சந்திரனுக்கு சென்று விட்டு மறுபடியும் சுற்றுப்பாதைக்கு திரும்பும் வகையில் CEV ஐ வடிவமைத்துள்ளார்கள்.

1960ஆம் ஆண்டு சந்திரனில் தரையிறங்கிய விண்கலம் விண்வெளி தொழில்நுட்பத்தில் மிகப் பெரிய சவாலாக இருந்தது. தொழில்நுட்ப வல்லுனர்கள் இதைச் செலுத்துவதற்கு பலவிதமான கருத்துக்களையும் அணுகுமுறைகளையும் தெரிவித்தனர். முதல் அணுகுமுறையின்படி மிகப்பெரிய சாட்டர்ன் 8 அல்லது நோவா ரொக்கெட்டை சந்திரனுக்கு அனுப்புவது, தரையிறக்குவது பின்னர் பூமிக்கு அனுப்புவது போன்றவையாகும். இதற்கு எரிபொருள் அறை மற்றும் எரிபொருள் அதிகளவில் தேவைப்பட்டது. எனவே இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இரண்டாவது அணுகுமுறையாக சிறு சிறு ரொக்கெட்டுக்களை சந்திரனுக்கு அனுப்பத் தேவைப்படும் விண்கலத்திற்கு தேவையான பொருட்களையும் இயந்திரங்களையும் புவி சுற்றுப்பாதைக்கு அனுப்பி அங்கிருந்து மிகப்பெரிய விண்கலம் அமைக்கப்பட்டு சநதிரனுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டது. அதிலும் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. ஆகவே அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது.

இறுதியாக தொழில்நுட்ப வல்லுனர்கள் ஒரேயொரு சாட்டர்ன் – 5 ரொக்கெட்டை புவி சுற்றுப் பாதைக்கு அனுப்பி சோதனையிடப்பட்ட பிறகு மீண்டும் சந்திரனுக்குச் செல்வது அங்கிருந்து அப்போலோ விண்கலம் –2 விண்வெளி வீரர்களுடன் கழற்றிவிடப்பட்டு சந்திரனில் தரையிறக்கப்படும். பின்னர் அங்கிருந்து புவி சுற்றுப்பாதைக்கு திரும்பும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.



புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்காக அனுப்பப்படும் விண்கலத்தை சோதனையிடும் வல்லுனர்கள்.

இந்த முறையை நாசா விஞ்ஞானிகள் கடந்த சில மாதங்களாக ஆராய்ந்து வருகின்றனர். இதற்கான திட்ட வரைபடமும் தயாராகி வருகிறது.


விண்வெளி வீரர்கள் நிலவியல், வானியல், இயற்பியல் உள்ளடக்கிய பல்வேறு விஞ்ஞான முறைகளை ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக பூமிக்கு அப்பால் இருக்கும் சூரியக் கதிர்களின் தாக்கம் குறைவான ஈர்ப்பு விசையில் மனிதனின் தாங்கும் சக்தி இவற்றைப் புற்றி அறிய முடியும். சந்திரனின் தென்துருவத்தில் ஹைட்ரஜன், எரிபொருள் மற்றும் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு கள் இருப்பதாகக் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சந் திரனின் வடதுருவமான இருள் சூழ்ந்த பகுதியிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

1969ஆம் ஆண்டு அப்போலோ –2 மனிதனுடன் சந்திர னில் இறங்கியது. நாசா விண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அனுப்பக் காரணம் போதிய அனுபவங்களைப் பெறுவதற்கு.

2020ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்திற்கு ஆராய்ச்சி மேற்கொள்ள மிகப்பெரிய வரைபு திட்டமும் தயாராகி விட்டது. மிகப்பெரிய ரொக்கெட் மூலம் அனுப்பப்படும் 6 விண்வெளி வீரர்கள் கொண்ட குழு 500 நாட்கள் செவ்வாய்க் கிரகத்தில் தங்கியிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

ஆராய்ச்சியின் போது விஞ்ஞானிகள் வசிப்பதற்குத் தேவையான வீடுகள், மின்சாரம், தகவல் தொழில்நுட்ப சாதனம், ஒக்ஸிஷன், திரவ ஒக்ஸிஷன் மற்றும் மீதேன் போன்றவை ஏற்படுத்தப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-76



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 76**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப்பெயர்* :- ..............................

*முகவரி* :- ..............................
..............................
..............................

*இங்கே வெட்டுக* ------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)இது நிலையற்றது என்று தெரிந்தும் மனிதன் கற்பனையில் சஞ்சரிக்கிறான். (3)நடனம் இப்படியும் அழைக்கலாம். (5)பழங்குடி மக்களில் இவர்களும் அடங்குவர். (6)துளி (7)மழைக்கு அறிகுறி. (10)இறப்பு (11)அறிவ்னன் (12)இசைக்கருவிகளில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

(1)புனித பயணம். (2)கைவினை - இப்படியும் கூறலாம். (3)ஆமை - இப்படியும் அழைப்பர். (4)சுத்தம் (8)ஒரு மொழி. (9)நிறங்களில் ஒன்று (10)சாட்சி.

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 74 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.மகாபாரதம் 4.தந்தி 5.கணனி 7.தாதி 9.சதி 10.கடன் 11.கடம். 12.புவி

### மேலிருந்து கீழ்

1.மருதநாயகம் 2.பாரதிதாசன் 3.தரணி 6.கடகம் 8.திதி 11.கவி

## பரிசுபெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- க.யதுஷன்
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

**இரண்டாம் பரிசு** :- க.மனோகரன்,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

**மூன்றாம் பரிசு** :- செல்வி. ஏ.வாசவி
இல.620, நாவலர் வீதி,
அரியாலை.

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

திருமதி P.S.ராணி, வட்டுக்கோட்டை. க.கார்த்திகாயினி, பருத்தித்துறை. ம.சந்திரமதி, கரணவாய். க.கந்தசாமி, வல்வெட்டித்துறை. ந.சிவமயம், காரைநகர். S.தர்சினி, வண்ணார்பண்ணை. க.தர்சன், யாழ்ப்பாணம். ம.மதியழகன், கொடிகாமம். அ.கயல்விழி, இணுவில்.

**எது உண்மையான ஆனந்தம் அல்லது மேலான சுகம் என்று நிர்ணயிப்பதற்கு, அறிவு, அனுபவம், இயற்கை உணர்வு ஆகிய மூன்றும் தேவை.**

***

**நேர்மையான மனம் படைத்தவனுக்கு சட்டம் தான் கடவுள்! முட்டாளுக்கு கேளிக்கைதான் கடவுள்.**

*-பிளேட்டோ*

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு-2005

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக்காக மேலும் 5800 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மீளளிப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் தமிழீழ நிதித்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக தெரிவானோரின் விபரம் வருமாறு,

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

1.யா/யா/35திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி இராசரத்தினம்
2.யா/யா/48திருமதி. புவனேஸ்வரி மயில்வாகனம்
3.யா/யா/56திரு. சின்னத்துரை அமிர்தலிங்கம்
4.யா/யா/61திரு. மரியாம்பிள்ளை ஜேம்ஸ்இராசசிங்கம்
5.யா/யா/95திருமதி. கமலாம்பிகை துரைசிங்கம்
6.யா/யா/128திரு. கனகரெத்தினம் செல்வராஜா
7.யா/யா/197திருமதி. புஸ்பமலர் ஜேக்கப்
8.யா/யா/214திரு. ஐயம்பிள்ளை பொன்னம்பலம்
9.யா/யா/297திருமதி. தவமலர் யோசெப்மரியான்
10.யா/யா/319திரு. சாமுவேல் ஆனந்தராசா தருமரத்தினம்
11.யா/யா/357திருமதி. தங்கமணி பழனிச்சாமி
12.யா/யா/359திரு. முத்துக்குமார் தருமலிங்கம்
13.யா/யா/381திருமதி. பரமேஸ்வரி உருத்திரா
14.யா/யா/388திருமதி. திலகவதி கந்தசாமி
15.யா/யா/410திருமதி. பாறுபதி சின்னத்தம்பி
16.யா/யா/437திரு. பாவிலு அமிர்தநாயகம் (ஜெபி)
17.யா/யா/461திரு. முருகன் இராசரத்தினம்
18யா/யா/491திருமதி. பராசக்தி சிவசுப்பிரமணியம்
19.யா/யா/529திரு. இராசா இராசசுந்தரம்
20.யா/யா/535திரு. தியாகராசா திருநாவுக்கரசு
21.யா/யா/550திரு. ஆறுமுகம் பொன்னப்பா குலசிங்கம்
22.யா/யா/567திருமதி. தங்கமணி நடராஜா
23.யா/யா/575திரு. மருதப்பா கந்தசாமி
24.யா/யா/580திருமதி. பூரணம் இரத்தினம்
25.யா/யா/587திரு. நல்லதம்பி சோமசுந்தரம்
26.யா/யா/588திரு. சரவனமுத்து பாலசுப்பிரமணியம்
27.யா/யா/590திரு. நாராயணசாமி நாகராசா
28.யா/யா/609திரு. துரையப்பா நடராசா
29.யா/யா/647திருமதி. மனோன்மணி சச்சிதானந்தம்
30.யா/யா/650திருமதி. மனோன்மணி சச்சிதானந்தன்
31.யா/யா/667திரு. அரபமூர்த்தி தங்கவேல்
32.யா/யா/749திரு. பொண்ணம்பலம் வீரபத்திரன்
33.யா/யா/753திரு. பொன்னம்பலம் வீரபத்திரன்
34.யா/யா/811திருமதி. கமலாட்சி கோபாலகிருஷ்ணன்
35.யா/யா/864திரு. பர்னாந்து செபமாலை மரியதாஸ்
36.யா/யா/878திரு. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை
37.யா/யா/893திருமதி. செல்வதியம்மா செல்வரத்தினம்
38.யா/யா/926திரு. ஜோசேப் சவிரிமுத்து
39.யா/யா/936திரு. பத்தினாதர் சிறில்
40.யா/யா/942திருமதி. லூசியா அலெக்சாண்டர்
41.யா/யா/943திருமதி. சவேரியம்மா இம்மனுவேல்
42.யா/யா/949திருமதி. பறுவதம் சங்கரப்பிள்ளை
43.யா/யா/963திருமதி. தங்கரத்தினம் பேரம்பலம்
44.யா/யா/977திருமதி. பத்மாவதிஅம்மாள் சோமகாந்தன்
45.யா/யா/1001திருமதி. றெஜினா கிலோமினா தனசிங்கம்
46.யா/யா/1005திரு. செல்லையா கணபதிப்பிள்ளை
47.யா/யா/1017திரு. தம்பு தங்கராசா
48.யா/யா/1033திரு. தம்பு தங்கராஜா
49.யா/யா/1041திரு. தம்பிப்பிள்ளை இராஜேந்திரா
50.யா/யா/1060திருமதி. ஜெகதீஸ்வரி நரேந்திரா
51.யா/யா/1102திரு. வஸ்தியாம்பிள்ளை யோசவ் மார்சலீன்
52.யா/யா/ 1110திருமதி. றெயினா தேவசகாயம்
53.யா/யா/1117செல்வி. கிருபா ஜனனி வேதநாயகம்
54.யா/யா/1118திருமதி. சைவராணி ஜெயரத்தினம்
55.யா/யா/1119திருமதி. யோகவதி மகேஸ்வரன்
56.யா/யா/1124திருமதி. பத்மாவதி கந்தசாமி
57.யா/யா/1125திருமதி. கனகலட்சுமி சபாரத்தினம்
58.யா/யா/1137திருமதி. பிறிட்ஜென் இராஜசூரியர்
59.யா/யா/ 1140திருமதி. அன்னலெட்சுமி ஜேம்ஸ்
60.யா/யா/1141திரு. ஞானப்பிரகாசம் சிறில்
61.யா/யா/1146திரு. நல்லதம்பி விஜயரெட்ணம்
62.யா/யா/1157திருமதி. அன்னலெட்சுமி இரத்தினம்
63.யா/யா/ 1169திருமதி. மரியம்மா எட்வேட்பிறின்ஸ்
64.யா/யா/ 1220திரு. விக்ரர்ராசநாதன் ஞானப்பிரகாசம்
65.யா/யா/1237திரு. முத்தையா அல்பிறட் ஜெயராஜா
66.யா/யா/1239திரு. அந்தோனிப்பிள்ளை யோண்பிள்ளை
67.யா/யா/1255திரு. ஸ்ரான்லி ரதிச்சந்திரன் நித்தியானந்த ராசா ஸ்பென்சர்
68.யா/யா/1294திரு. ஆசீர்வாதம் யோசேப் மரியதாசன்
69.யா/யா/1296திருமதி. பமலாவசந்தி றிச்சேட்ஸ்
70.யா/யா/1319திரு. கந்தையா மகாலிங்கம்
71.யா/யா/1343திரு. கந்தையா சோமசேகரம்பிள்ளை
72.யா/யா/1357திரு. செல்லப்பா நாகேசன்
73.யா/யா/1375திரு. இரத்தினம் செல்வநாயகம்
74.யா/யா/1383திரு. வல்லிபுரம் கந்தையா
75.யா/யா/1389திரு. இராமலிங்கம் லோகநாதன்
76.யா/யா/1391திரு. கதிரவேலு விஜயசிங்கம்
77.யா/யா/1428திரு. இரபாயல்லூட்ஸ் சேவியர்
78.யா/யா/1454திரு. தம்பாப்பிள்ளை குணசிங்கம்
79.யா/யா/1469திரு. மாசாணம்பிள்ளை இராமகிருஷ்ணன்
80.யா/யா/1478திருமதி. வடிவாம்பிகை சண்முகராசா
81.யா/யா/1508திரு. விஸ்வலிங்கம் மகாலிங்கம்
82.யா/யா/1512திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
83.யா/யா/1522திருமதி. மேரிகத்தலின் திருஞானசம்பந்தர்
84.யா/யா/1554திரு. மாசானம்பிள்ளை இராமகிருஷ்ணன்
85.யா/யா/1580திருமதி. இராஜேஸ்வரி சரவணமுத்து
86.யா/யா/1611திருமதி. அக்னஸ் ஜோர்ஜ்
87.யா/யா/1617செல்வி. லக்சி நீக்கலஸ்
88.யா/யா/1618திரு. சிவனாச்சாரி பத்மநாதன்
89.யா/யா/1620திருமதி. சறோஜினி கைலாயபிள்ளை
90.யா/யா/1638திரு. சவிரிமுத்து அமிர்தராஜா
91.யா/யா/1695திரு. செல்லையா தியாகராஜா
92.யா/யா/1710திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
93.யா/யா/1713திரு. வேலுச்சாமி கந்தசாமி
94.யா/யா/1751திருமதி. நித்தியலட்சுமி கதிர்காமத்தம்பி
95.யா/யா/1752திருமதி. பாக்கியம் சங்கரப்பிள்ளை
96.யா/யா/1765திரு. அந்தோணிப்பிள்ளை யோசவ்
97.யா/யா/1781திரு. பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி
98.யா/யா/1798திருமதி. ராசாத்தியம்மா சபாரட்ணம்
99.யா/யா/1842திருமதி. ராதாலட்சுமி நாராயணசாமி
100.யா/யா/1854திருமதி. புவனேஸ்வரி இராசையா
101.யா/யா/1879திருமதி. அம்புஜம் துரைசாமி
102.யா/யா/1893திருமதி. ருக்மணி தியாகராஜா
103.யா/யா/1913திரு. தில்லையம்பலம் சண்முகலிங்கம்
104.யா/யா/1919திரு. வைத்தி சந்தியாப்பிள்ளை
105.யா/யா/1932திரு. காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்
106.யா/யா/1944திரு. ஏரோனி பிரான்சீஸ்
107.யா/யா/1956திரு. மரியான் பேதுருப்பிள்ளை வேதநாயகம்
108.யா/யா/1965திரு. சாமுவேல் வயிரமுத்து நவரட்ணம்
109.யா/யா/1977திருமதி. ஞானாம்பிகை மகாதேவன்
110.யா/யா/2008திருமதி. எலிசபேத் செபஸ்ரியாம்பிள்ளை
111.யா/யா/2018திருமதி. மரியம்மா யோசேப்
112.யா/யா/2038திருமதி. செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்
113.யா/யா/2042திருமதி. செல்வராணி அழகராஜா
114.யா/யா/2052திருமதி. ராசலெட்சுமி சண்முகரெட்டினம்
115.யா/யா/2075திரு. சவிரிமுத்து மரியாம்பிள்ளை டோமினிக்
116.யா/யா/2081திரு. அருளப்பு பிலிப்பையா
117.யா/யா/2100திருமதி. ராஜேஸ்வரி ஸ்ரனிஸ்லோஸ்
118.யா/யா/2103திருமதி. நாகேஸ்வரி இராசையா
119.யா/யா/2123திருமதி. பரமேஸ்வரி கனகசபை
120.யா/யா/2131திருமதி. இராஜேஸ்வரி கிறிஸ்ரி
121.யா/யா/2146திருமதி. ருக்மணி மகேந்திரன்
122.யா/யா/2160திரு. அலோசியஸ் பேனாட் பெர்னான்டஸ்
123.யா/யா/2185திரு. அந்தோனிப்பிள்ளை யோசெப்
124.யா/யா/2202திரு. சென்றோக் அகஸ்ரின்
125.யா/யா/2257திரு. சோமசுந்தரம் சிவபாலசிங்கம்
126.யா/யா/2278திரு. குமாரசாமி குமாரசூரியர்
127.யா/யா/2288திரு. நாகனாதர் பாலசிங்கம்
128.யா/யா/2412திருமதி. நவமணி துரைசிங்கம்
129.யா/யா/2440திருமதி. பபிலோனியா அந்தோனிப்பிள்ளை
130.யா/யா/2444திரு. மிக்கேல் அஞ்சலோ
131.யா/யா/2471திருமதி. திரேசம்மா அந்தோணிப்பிள்ளை
132.யா/யா/2527திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு
133.யா/யா/2537திருமதி. பூமலர் பிலிப்
134.யா/யா/2555திரு. சோமசுந்தரக்குருக்கள் வரதராசசர்மா
135.யா/யா/2570திரு. நாகலிங்கம் இராசு
136.யா/யா/2575திரு. முத்துக்குமாரு கந்தசாமி
137.யா/யா/2577திரு. பொன்னம்பலம் சிவப்பிரகாசம்
138.யா/யா/2586திரு. பர்ணாந்து பொனிப்பாஸ்
139.யா/யா/2595திருமதி. பத்மாவதி மதனசேகரன்
140.யா/யா/2600திருமதி. காந்திமதி வேலாயுதம்
141.யா/யா/2606திரு. நாகேந்திரர் மருதலிங்கம்
142.யா/யா/2620திரு. ஆசிர்வாதம் ஸ்ரீபன்
143.யா/யா/2627திருமதி. பராசக்தி கந்தசாமி
144.யா/யா/2657திரு. சோமசுந்தரஜயர் நடராஜசர்மா
145.யா/யா/2658திருமதி. லியோணி குலசிங்கம்
146.யா/யா/2666திருமதி. ப்ரமேஸ்வரி தனபாலரட்ணம்
147.யா/யா/2750திருமதி. தங்கம்மா குமாரவேலு
148.யா/யா/2751திருமதி. கமலாம்பிகை சண்முகநாதன்
149.யா/யா/2816திருமதி. மணி யேசுதாசன்
150.யா/யா/2824திருமதி. பொன்னம்மா ஆறுமுகம்
151.யா/யா/2856திருமதி. சிவபாக்கியம் இரத்தினம்
152.யா/யா/2883திரு. பிலிபஸ் யோசப் பாலேந்திரா
153.யா/யா/2912திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை
154.யா/யா/2930திரு. செல்லர் நரேந்திரன்
155.யா/யா/2958திரு. செல்லத்துரை இராசரெத்தினம்
156.யா/யா/3019திருமதி. மேரிறோசம்மா அமிர்தவாசகம்
157.யா/யா/3051திரு. அலோசியஸ் பஸ்ரியாம்பிள்ளை
158.யா/யா/3059திருமதி. மேரிஏணஸ்ரீன் யோண்பிள்ளை
159.யா/யா/3083திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வரட்ணம்
160.யா/யா/3101திருமதி. அந்தோனியாப்பிள்ளை சத்தியநாதன்
161.யா/யா/3132திரு. அந்தோனிப்பிள்ளை அலெக்சீஸ்
162.யா/யா/3157திரு. குருசுமுத்து மாசிலாமணி
163.யா/யா/3227திருமதி. விஜயலட்சுமி முத்துக்குமாரு
164.யா/யா/3248திருமதி. பிலோமினா செல்வராசா
165.யா/யா/3322திருமதி. மாகிறேற் பெனடிற்
166.யா/யா/3326திரு. யோசப் விக்ரர் அன்ரனி
167.யா/யா/3327திருமதி. மெக்டலீன் அல்போன்சஸ்
168.யா/யா/3332திருமதி. இராசம்மா அந்தோனிப்பிள்ளை
169.யா/யா/3359திரு. இறப்பியல் தோமஸ்
170.யா/யா/3361திரு. டோறஸ் இராஜசிங்கம்
171.யா/யா/3371திரு. வஸ்தியாம்பிள்ளை சூசையா
172.யா/யா/3446செல்வி. மேரிறேசா கொன்ஸரன்ஸ் சவரிமுத்து
173.யா/யா/3460திருமதி. ஜெர்மனி அருளப்பு
174.யா/யா/3467திருமதி. திரேசம்மா நேபட் ஸ்ரனிஸ்லோஸ்
175.யா/யா/3470திருமதி. றோசம்மா மனவல்
176.யா/யா/3473திருமதி. றீற்றம்மா பெணான்டோ
177.யா/யா/3475திருமதி. இமல்டா சிறில்
178.யா/யா/3505திரு. பிறகாசம் மாட்டீன்
179.யா/யா/3527திருமதி. மேரியம்மா யோசப்நாயகம்
180.யா/யா/3536திரு. அந்தோனி யோண்
181.யா/யா/3566திருமதி. செபமாலை அந்தோனிப்பிள்ளை
182.யா/யா/3568திரு. மனவல் யூலியன்
183.யா/யா/3576திரு. அந்தோனி யேசுதாசன்
184.யா/யா/3579திருமதி. ஆனீகி கிறகோரி
185.யா/யா/3616திருமதி. மேரிபிபியானா சேவியர்
186.யா/யா/3631திரு. முருகேசு கனகரெத்தினம் முருகையா
187.யா/யா/3643திருமதி. திரேசம்மா இம்மானுவல்
188.யா/யா/3707திரு. நாகலிங்கம் குமாரசாமி
189.யா/யா/3723திருமதி. இராஜேஸ்வரி தம்பிராஜா
190.யா/யா/3748திருமதி. றோஸ்மேரி பாலசிங்கம்
191.யா/யா/3750திரு. செபஸ்தியன் யோகரட்ணம்
192.யா/யா/3776திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்
193.யா/யா/3796திருமதி. அரியமலர் பாலச்சந்திரமூர்த்தி
194.யா/யா/3803திரு. சோமசுந்தரம் பரமானந்தம்
195.யா/யா/3815திரு. போடிரெட்டியார் குருசாமி
196.யா/யா/3818திருமதி. ஜீவரட்ணாவதி இராசரெத்தினம்
197.யா/யா/3825திருமதி. மாணிக்கம் கந்தையா
198.யா/யா/3850திரு. பறனாந்து யோசேப் அன்ரனி
199.யா/யா/3856திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
200.யா/யா/3872திருமதி. கனகம்மா குணசிங்கம்
201.யா/யா/3880திருமதி. லட்சுமி கனகசபை (9ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒருதகவல்

## தாயன்பு

ஒரு வயதான அம்மா தெருவழியே போக்கொண்டிருந்தார். அவர் தன்கையில் எதையோ வைத்துக்கொண்டு அதை அடிக்கடி பார்த்துக்கொண்டேயிருந்தார். ஒருவன் மெதுவாக அவரின் அருகில் சென்று கையிலிருப்பது என்னவென்று எட்டிப்பார்த்தான். பார்த்தால் அவரது கையில நான்கு பறகள் இருந்தன. இவன் ஆச்சரியமாக அந்த அம்மாவைப் பார்த்து ஏனம்மா! உங்களுக்கு என்ன பைத்தியமா? ஏது இந்தப் பல், எதற்காக இதைக்கையில் வைத்துக்கொண்டு அலைகிறாய்? என்று கேட்டான்.

அதற்கு அந்த அம்மா விபரம் கூற ஆரம்பித்தார். இதோ பாரப்பா! எனக்கு ஒரு மகன் இருந்தான். அவனைமிகவும் செல்லமாக வளர்த்தேன். அவனைத் தரையில் நடக்க விடுவதில்லை.

எப்போதும் தூக்கிவைத்திருப்பேன். அவன் வளர்ந்து பொியவனாகி பாடசாலைக்குப் போகும் போதும் கூட புத்தகப்பையை நான் தான் சுமந்துகொண்டு போவேன் பார்க்கிறவர்கள் கூடகேலிசெய்வார்கள். "ஏனம்மா? படிக்கப் போவது நீயா? உன்மகனா?' என்று. அவன் இன்று எவ்வளவோ பெரிய மனிதனாகிவிட்டான் வெளிநாட்டில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான். சமீபத்தில் இங்குவந்து விட்டுப்போனான்.

ஒருநாள் ஏதோ கோபத்தில் என்னை அறைந்துவிட்டான். அப்போது இந்த நான்குபறகளும் விழுந்துவிட்டது. இன்னும் விழுந்திருக்கும். ஆனால் பல்தான் இல்லை. என்மகன் அறைந்ததனால் விழுநத பறகள் அல்லவா? அதனால் இதை எப்போதும் என்கையில் வைத்துக் கொண்டு ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவன் தான் வெளிநாட்டுக்குப் போய்விட்டான். அவனைப் பார்க்க முடியாத என் ஏக்கத்தை நான் இந்தப்பல்லைப் பார்த்துப் போக்கிக் கொள்கிறேன். என்றாராம்.

இந்தக் கதை எதற்காக வென்றால் தாயன்பு எப்படிப் பட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்காக கல்யாணம் ஆனதன் பின்பு தாயை மறந்துவிடுபவர்கள் எத்தனை பேர் இந்த உலகில் இருக்கிறார்கள் அவர்கள் காதிலும் விழவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தகவல் ஆனால், ஒரு விடயம் மட்டும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தாயை மதிக்கத் தெரிந்தவர்கள் தான் இன்று வாழ்க்கையில் எல்லா விதத்திலும் முன்னுக்குவந்திருக்கிறார்கள். வேண்டுமென்றால் விசாரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இன்னொரு அம்மா இருந்தார். அவர் தினமமும் கோயிலுககுவருவார்கள். சாமியைப்பார்த்து "கடவுளே! நான் இறந்துவிட்டால் நர்கத்திற்குப் போகவேண்டும். 'என்று வேண்டுவாராம் எல்லோரும் சொர்க்கத்துக்குப் போகவேண்டும் என்று தானே வேண்டுவார்கள்.

ஆனால் இந்த அம்மா இப்படி வேண்டிக்கொள்கிறாரே என்று அங்கே இருந்த அர்ச் சருக்குச் சந்தேகம். ஒருநாள் அதைநேரடியாகவே அவரிடம் கேட்டு விட்டார். அதற்கு அந்த அம்மா பதில் சொன்னார்.

"ஐயா! எனக்குத் திருமணமாகி நீண்டநாட்கள் குழந்தை இல்லாமல் இருந்தது. கோயில்குளம் எல்லாம் சுற்றி வந்தேன் நீண்டநாள் கழித்து குழந்தைபிறந்தது. ஆண் குழந்தை. அவனை நான் மிகவும் செல்லம்கொடுத்து வளர்த்தேன் அதன் விளைவு என்னவென்றால் அவன் மிகவும் மோசமாக ஆகிவிட்டான. கெட்டபழக்கவழங்க்ங்களை கற்றுக்கொண்டான்.

அவன் இறந்துபோனால் நிச்சயம் அவனுக்கு நரகம் தான் கிடைக்கும் அந்தள விற்கு அவன் கெட்டவனாகி விட்டான் எனக்குத் தெரியும். இவனுக்கு நரகத்தில் கூடயாரும் தயவுகாட்ட மாட்டார்கள்.

அதனால் இவனுக்கு முந்தி நான் இறந்து நரகத்திற்குப் போய்விட்டால் இவனுக்குப் பணிவிடை செய்யலாம் இல்லையா? அதனால் தான் நரகத்திற்குப் போகவேண்டும் என்று தினமும் ஆண்டவனிடம் கேட்கிறேன் என்று கண் கலங்கிப் பதில் சொன்னார்.

அதுதான் தாய் உள்ளம் தாயின் பெருமையை சரியாக உணர்ந்து கொண்டால் அவர்களுக்கு எப்போதும் எந்த கஸ்டமும் வராது இது ஏதோ உபதேசத்திற்காகக் கூறும் வார்த்தை இல்லை உண்மையானவார்த்தை.

இந்த விபரங் களை யெல்லாம் நண்பர் ஒருவரிடம் சொன்னேன். அவர் கொஞ்ச நாட்கள் கழித்து என்னைத் தேடிவந்தார் கையில் நான்கு பறகள் வைத்திருந்தார்.

'என்ன ஆனது? ஏது இந்தப்பறகள்? ' என்று விசாரித்தேன் உங்கள் உபதேசத்தைக் கேட்டுவிட்டு இந்த உலகிலுள்ள எல்லோரையும் தாயாக நினைக்க ஆரம்பித்தேன். ஒரு அம்மாவை கடைத்தெருவில் பார்த்து தாயே என்று கூப்பிட்டேன் அவர் உடனே என்னை பளார் என்று அறைந்து விட்டார். பல்விழுந்து விட்டது. அதைத்தான் பொறுக்கிக் கொண்டு நேராக உங்களைத் தேடிவந்தேன் என்றார்.

'தாயே என்றுதானே கூப்பிட்டீர்கள் அதற்கு ஏன் அறைந்தார்?' என்று கேட்டேன் 'நான் தாயே' என்று கூப்பிட்டது.

அவரது காதில் "நாயே' என்று விழுந்து விட்டதாம் அதுதான் இப்படி ஆகிவிட்டது" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## -ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை காப்பாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க



வேண்டியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் இந்தத் தேர்தல் விசேடமான ஒரு தேர்தலாகும். விசேடமாக நாட்டிற்கும் சுதந்திரக்கட்சிக்கும் தீர்க்கமான ஒரு தேர்தலாகும் கட்சியின் மீது பற்றுள்ளவர்கள் கட்சிக்காக அடி வாங்கி சிறைக்குச் சென்றவர்கள் என பலர் இக்கட்சியில் உள்ளனர்.

நண்பர்களே! பல விடயங்களை இங்கு பேசவில்லை உங்களுக்குத் தெரியும் மற்றைய கட்சிகளில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை காப்பாற்றும் செயற்பாட்டை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

பண்டாரநாயக்க குடும்பத்தினருக்கு இன்றும் இருக்கவேண்டிய கட்சியை காப்பாற்றும் சிந்தனை இல்லை. எனக்கும் இல்லை எனது இரண்டு பிள்ளைகளையும் அரசியலுக்கு வர விடமாடடேன் உங்களுக்கு அந்த உறுதி மொழியினை வழங்குகின்றேன்.

அரசியல் காரணமாக அவர்களை கஷ்டப்பட விட மாட்டேன் தற்போது இருவர் மாத்திரமே எஞ்சியுள்ளோம். இன்று கொன்றுவிடுவார்கள் அல்லது வேறு எதனையும் செய்வார்கள்.

எமது கட்சிக்குள்ளேயே இதனை செய்வதற்கு இடமுண்டு அதனால் பண்டாரநாயக்க குடும்பத்தினரை வைத்துக்கொண்டு அரசியலைச் செய்ய வேண்டிய நோக்கம் எனக்கு இல்லை என்றார்.(ந-8)

# தலதா மாளிகையால் வழங்கப்பட்ட நிவாரண நிதிக்கு நடந்தது என்ன?

## அஸ்கிரிய பீடமகாநாயக்கர் கேள்வி

(கொழும்பு)

தலாதா மாளிகையின் முன்னால் தியவதன நிலமே நிறைஞ்சன் விஜேரட்ண அஸ்கீரிய பீட மகா நாயக்கரை சந்தித்துப் பேசியுள்ளார்.

அச்சந்திப்பின் போது பீடாதிபதி தாம் சுனாமி நிவாரணத்திற்காக வழங்கிய பணத்திற்கு என்ன நடந்தது என அதிகாரிகளைக் கேட்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தலதா மாளிகையின் நிதியில் இருந்து இரண்டரை இலட்சம் ரூபா நிதியும் பீடாதிபதிகளின் நிதியில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா நிதியும் நிவாரணமாக வழங்கப்பட்டிருந்தது.

ஆனால்,,இதற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு இன்னமும் வழங்கப்படவில்லை காசோலைகள் மூலமே மேற்படி நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்தன.

தலாதாமாளிகையின் காசோலை பிரதமரின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. அதோபோல் குருமார்களின் காசோலை மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகள் உட்பட்ட மகாசங்கத்தின் முன்னிலையில் முன்னால் மத்திய மாகாண ஆளுநர் மொண்டி கோபல்லாவவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதனை அஸ்கிரிய பீடாதிபதியிடம் தெரிவித்த நிறைஞ்சன் விஜேரட்ண மறைந்த மொண்டி கோபாலவா தன்னிடம் கையளிக்கப்பட்ட காசோலையை பிரதமர் அலுவலகத்திடம் கையளித்துவிட்டதாக எழுத்து மூலம் அறிவித்திருந்தாகவும் கூறினார்.

(ந-06)

# பொலிஸ் துறையில் 'ரணில் குழு' மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் தலைமையில் விக்கிரமசிங்கவை வெளிப்படையாக ஆதரிக்கும் குழுவினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலிஸ்மா அதிபரிடம் அமைச்சர் மங்கள சமரவீர முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் மங்கள சமரவீர இது தொடர்பில் கூறுகையில்,

பொலிஸ்துறையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரின் தேர்தல் அலுவலகங்களின் செயற்பாட்டைத் தடுத்துவருகின்றனர்.

ராஜகிரிய பகுதியின் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ஐக்கிய தேசியக்கட்சி மாகாணசபை உறுப்பனரின் உறவினர் இவர் வெளிப்படையாகவே மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அலுவலகங்களின் செயற்பாட்டைத் தடுத்து வருகின்றார்.

அவர்தான் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவராக நீண்டகாலம் பொறுப்பில் உள்ளார்.

இத்தகைய 'அதிகாரிகள் நாட்டின் தேர்தல் திணைக்கள விதிகளை மீறிச் செயற்படுகின்றனர். இத்தகைய அதி காரிகளுக்கு எதிரான சட்டப்பூர்வ நடவடிக்கையை அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கின் கீழ் எதிர்கொள்ள நேரிடும். இது தொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் விரிவான முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அண்மையில் சண்டே லீடர் மற்றும் ஹிருதின அச்சகம் மீதான தாக்குதலுக்குப் பின்னால் ஐக்கிய தேசியக்கட்சியினரே உள்ளனர். அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவில்உள்ள ஆயுதக் குழுவினரே இத்தாக்குலில் ஈடுபட்டனர்.

இந்த ஆயுதக்குழுவினர் ஸ்ரீகொத்தாவில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் தங்கியிருந்துள்ளனர். இந்தக் குழுவினரே சில நாட்களுக்கு முன்பாக சில தேவாலாயங்கள் மீது தாக்குதல் நடத்தியும் எரித்தும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் எங்களுக்குத் தகவல்களை அளித்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ஐக்கிய தேசியச் கட்சிதான் பாதுகாத்து வருகிறது இந்த விவரங்களும் பொலிஸ் அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றார். (ந)

# தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவியாக இராணுவம்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் நாளில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கான பாதுகாப்பினை வழங்குவது பொலிஸாரின் கடமை என்பதால் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் இராணுவத்தினர் நிறுத்தப்படுவார்கள்.

தெற்கின் பாதுகாப்பிற்காக வடக்குக்கிழக்கில் இருக்கும் இராணுவத்தினரை வரவழைக்கப் போவதில்லை என்றும் அதற்கென மேலதிக படையணி ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பொலிஸாருக்கு உதவிக்கு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவார்கள் அதற்கென அங்கு போதுமான அளவு பாதுகாப்பு படையினர் உள்ளனர் என்றும் இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட மேலும் தெரிவித்தார். (ச-4)

# இலங்கையில் 20 இலட்சம் பேர் ஒஸ்ரியோபொரோஸிஸால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 20 இலட்சம் பேர் வரை ஒஸ்ரியோ பொரோஸிஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வரையறுக்கப்பட்ட நியூஸிலாந்து மில்க்லங்கா நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

மனிதன் முதுமையடையும் போது அவனின் என்புகள் பலவீனமடைவதற்கான காரணங்களை அறிந்துகொள்வதற்காக இலங்கையின் பல பகுதிகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் மேலும் பலர் இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளதாகவும் இவ் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வுக்கென நியூலாந்து மில்க் நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் 40 மில்லியன் அமெரிக்க டெலர்களை செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# குண்டக்க... மண்டக்க...

## திரை விமர்சனம்

தனது தங்கையை கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு திருமணம் செய்து வைப்பதற்காக குறுக்கு வழியில் முயற்சி செய்யும் ஒரு வாலிபனின் கதை.

மெக்கானிக் கடை நடத்தும் வாலிபன் இளங்கோ. இவனது நண்பன் செல்லப்பா. இளங்கோ வசதியாக வாழ்வதற்காக பணக்காரப் பெண்ணை காதலிக்கிறான். செல்லப்பா திருட்டுத் தொழில் செய்து பணக்காரனாக முயற்சி செய்கிறான். இந்த நிலையில் இளங்கோ அவனது தங்கையை கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு குறுக்கு வழியில் திருமணம் செய்துவைக்க திட்டமிடுகிறான். இதற்கிடையே அவனுடைய காதலிக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கிறார்கள்.

தங்கைக்கு கோடீஸ்வர மாப்பிள்ளையை திருமணம் செய்யவும், அவன் விரும்பிய பெண்ணை மணக்கவும் நண்பனுடன் சேர்ந்து செய்யும் தில்லுமுல்லுகளும், கலாட்டாக்களும் கலந்த நகைச்சுவை காட்சிகளின் தொகுப்பே 'குண்டக்க... மண்டக்க...'

வக்கீல் இளங் கோவாக முதல் காட்சியில் அறிமுகமாகி



திறமையாக வாதாடும பார்த்திபன் போல வக்கீல் என்று தெரிய வருமபோது தொடங்கும் அவரது 'காமெடி' கலாட்டா படம் முழுவதும் தொடர்கிறது. வடிவேலுடன் சேர்ந்து செய்யும் காமெடிகளும் வடிவேலுவை போட்டு வாங்கும் இடங்களிலும் அதிரடிச் சிரிப்பை வரவழைக்கிறார்.

காதலியை மடக்கி பணம் பறிப்பதும் ஆசையைத் தூண்டி வளைத்துக் கொள்வதும் பார்த்திபனின் தனி ஸ்ரைல். தங்கையைக் காதலிக்கத் தூண்டி விட்டு பின்னர் தங்கையிடமே பதிலடி வாங்கும் போது 'பளீச்'.


வடிவேலு 'வெடி'வேலுவாக வலம் வருகிறார். செல்போன்கள் திருடி வியாபாரம் செய்யும்போது பார்த்திபனிடம் மாட்டிக் கொண்டு தவிப்பது செமகலாட்டா. ஆட்டோ திருடுவது, கஞ்சா இருப்பதாக பொலிஸாருக்கு போன் செய்துவிட்டு கங்சாவுடன் பிடிபடுவது, ஏலம எடுத்து விலையை ஏற்றுவது என்று வரும் காட்சிகளிலெல்லாம் கொடிகட்டிப் பறக்கிறார் வடிவேலு. கவிதாவின் காதலன் மீது பழிபோடுவதற்காக புவனேஸ்வரியை 'செட்-அப்' செய்து கூட்டிவர அவர் தனது முந்தானையைப் போட்டு தாண்டத் துடிப்பது கண்களைக் கூச வைத்தாலும் வயிற்றைப் புண்ணாக்குகிறது.

பார்த்திபனின் காதலி ரூபாவாக லட்சுமிராய். 'கவர்ச்சி' காட்டி தாராள விருந்து படைக்கிறார். பார்த்திபன் தங்கை கவிதாவாக 'ஆட்டோகிராப்' மல்லிகா. இவருடைய காதலன் நந்தாவாக அம்ருத். இவர்களுடன் கலாராணி, வனிதா, புவனேஸ்வரி, மதன்பாப் பயில்வான் ரங்கநாதன், ராஜ்மோகன், நல்லை சிவா, தியாகு எல்லோரும் 'குண்டக்க... மண்டக்க' காமெடிக்கு கை கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு சின்னக் கதையை வைத்துக்கொண்டு நகைச்சுவை காட்சிகளை கதைக்குப் பொருத்தமாக சேர்த்து கலகலவென்று படத்தைக் கொண்டு போயிருக்கிறார் அசோகன். இதற்கு அவரது கதை, திரைக்கதை, இயக்கம் கச்சிதமாக பொருந்தியிருக்கிறது. சில இடங்களில் இரண்டை அர்த்தங்களும் சம்பந்தமில்லாத கவர்ச்சிகளும் உண்டு. என்றாலும்... பார்த்திபன் - வடிவேலு கலாட்டாவில் குறைகளும் கலந்து கரைந்து போகின்றன.

பரத்வாஜ் இசையில் பாடல்கள் இனிமை. ஒளிப்பதிவு பரணி ஸ்ரீ.

குலுங்கக் குலுங்க சிரித்து மகிழலாம்.




# சிபிராஜ் - விக்ராந்த் இணையும் 'பட்டாசு'

திருவள்ளுவர் கலைக்கூடம் தயாரிக்க வீ.சேகர் வழங்கும் படம் 'பட்டாசு'. ஷக்தி சிதம்பரம் இயக்கத்தில உருவாகும் இந்தப் படத்தில் சிபிராஜ், விஜய் தம்பி விக்ராந்த் ஆகியோர் இணைந்து நடிக்கிறார்கள். சிபி ஜோடியாக சாயாசிங். விக்ராந்த் ஜோடியாக மதுமிதா ஆகியோர் நடிக்கிறார்கள். இவர்களுடன் விவேக் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

இந்தப் படம் குறித்து சிபி கூறும் போது, "விக்ராந்தும் நானும் மோதிக் கொள்ளும் நண்பர்களாக நடித்திருக்கிறோம். 'அக்கினி நட்சத்திரம்' போல இந்தப்படம் இருக்கும்" என்றார்.

விக்ராந்த், "இந்தப் படம் பற்றி என் அண்ணன் விஜய்யிடம் சொன்னேன் அவர் வாழ்த்தினார். அவர் படம் 'சிவகாசி' இந்தப் படம் 'பட்டாசு'. ஆனால் இரண்டு படங்களுக்கும் எந்தப் போட்டியும் இல்லை" என்று கூறினார்.

டைரக்டர் ஷக்தி சிதம்பரம், "இது வித்தியாசமான கதை. கலகலப்பாக இந்தப் படம் இருக்கும்" என்றார். 'பட்டாசு' படததை கே.பார்த்திபன், எஸ்.காரல்மார்க்ஸ் ஆகியோர் தயாரிக்கிறார்கள்.


இசை: ஸ்ரீகாந்த் தேவா. ஒளிப்பதிவு: சுரேஷ் தேவன். எடிட்டிங்: வி.டி.விஜயன். ஸ்டண்ட்: சூப்பர் சுப்பராயன். இயக்கம்: ஷக்தி சிதம்பரம்.

# நட்பு மழை



'மழை' படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களிடம் பிரபலமாகியுள்ள ஸ்ரேயா ரஜனியின் ஜோடியாக 'சிவாஜி' படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் அனைத்து பத்திரிகைகளில் மட்டுமல்ல ரசிகர்களிடமும் பரபரப்பாக பேசப்படுகிறார்.

தெலுங்கில் ஏற்கனவே பிரபலமாக இருக்கும் ஸ்ரேயா கதாநாயகர்கள் முதல் படப்பிடிப்பில் எடுபிடி வேலை செய்யும் சாதாரண ஊழியர்கள் வரை அனைவரிடமும் நற்புடன் பழகி நல்ல பெயர் வாங்கியிருக்கிறாராம். இனியும் தொடர்ந்து அதே பெயரை வாங்கினால் நல்லது.




'கஜினி' படத்தின் மூலம் நம்பர் ~ 1 கதாநாயகி என்ற அந்தஸ்து பெற்றுள்ளார் அஸின். தன்னைச் சந்திக்க வரும் ரசிகர்களிடம் மென்மையாகப் பேசுகிறார். அவர்கள் யாராவது தனக்கு ரசிகர் மன்றம் ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தால் அதை அன்புடன் மறுத்து விடுகிறாராம். 'முதலில் உங்கள் குடும்பத்தைக் கவனியுங்க' என்று அட்வைஸ் செய்து அனுப்பி விடுகிறாராம்.

# நயன்தாரா திடீர்




'கஜினி' படம் திரைக்கு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில் ஓர் திடீர் முடிவு செய்திருக்கிறார் நயன்தாரா. அது என்ன முடிவு?

இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் இரண்டு கதாநாயகிகள் கொண்ட படத்தில் நடிக்கக்கூடாது என்று உறுதியான முடிவு செய்துள்ளார்.

தற்போது விஜய்யுடன் ஒரே ஒரு பாடலுக்காக 'சிவகாசி'யில் ஆடியுள்ள அவர் அடுத்து நடிக்கும் 'கள்வனின் காதலி', 'ஈ', ' படங்களில் தனி ஹீரோயினாக நடிக்கிறார். சி 'வல்லவன்' படத்தில் மட்டும் ரீமாசென், சந்தியா இணைந்து நடிக்கிறார். மற்றும் தெலுங்கில் ஜுனா, பாலகிருஷ்ணா ஆகியோர் ஜோடியாக ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தப் படங்களிலும் அ யின்கள் இணைந்து நடிப்பார்கள் என்றாலும் அ மட்டுமே அதிக முக்கியத்துவம் இருக்கும் என்




# இசையில் கலக்கும்



பாடகி ஷோபா ச அமமா என்ற புதிய பய ம் டர்ந்து இவர் பாடிய கர்நா யிடப்பட்டது.

ஏ.வி.எம். சரவண சந்திரசேகர் வரவேற்க வெளியிட்டார். அ

விஜய் பேசும்போ அதிர்ஷ்டக்காரன். பாடிக்கிட்டு இருந்தி இருக்கிறது. எனது 5வயது மகனும் தாளம் தப்பாமல் சு

தனது புதிய இசைப் பரிமாணம் குறித்து ஷோபா சந்

"இசை என்றால் எனக்கு உயிர். ஆரம்பத்தில் மெல்லி என் கணவர் எனக்கு முழு ஊக்கம் கொடுத்தார். பிற கொள்வதற்காக மேடைப் பாடல் பாடுவதை விடும் நிலை சமபத்தில் எனக்கு கொஞ்சநேரம் கிடைத்தது.

இந்த இடைவெளியில் கர்நாடக இசை கற்றுக்கொண்டே 50 வயது ஆகிறது. என்றாலும் இசை என்று வந்துவிட்டா சமீபத்தில் 'சிவகாசி' படத்துக்காக ஒ த்துப் ல் ப விருப்பம் இருக்கிறது. மேடையில் பாட அழைத்தாலு குழந்தைகளுக்கும் இசை பயிற்சி கொடுப்பேன்" என்றா

எஸ்.ஏ.சந்திரசேகர், "நான் பணம் சம்பாதிக்க வேண் ஷோபாவும், மகன் விஜய்யும் புகழ்பெற வேண்டும் என்று

## ...தாரா திடீர் முடிவு



...திரைக்கு ...சூழ்நிலை ...டிவு செய் ...ன் தாரா. ...? ...காரணத் ... இரண்டு ...கொண்ட ...க்கூடாது ...முடிவு செய் ...

...ஜய்யுடன் ...காக 'சிவ ...ள அவர் 'கள்வனின் காதலி', 'ஈ', 'தலைமகன்' ஆகிய ...ஹீரோயினாக நடிக்கிறார். சிலம்பரசன் இயக்கும் ...ல் மட்டும் ராமாசென், சந்தியா, ஆகிய இருவருடன் ...றார். மற்றும் தெலுங்கில் வெங்கடேஷ், நாகர் ...ஜுனா ஆகியோர் ஜோடியாக மூன்று படங்களில் ...கிறார். இந்தப் படங்களிலும் அவருடன் வேறு ஹீரோ ...து நடிப்பார்கள் என்றாலும் அவரது கரக்டருக்கு ...க்கியத்துவம் இருக்கும் என்கிறார்.

## நினைத்து நினைத்துப் பார்த்தேன்.....


சரத்குமார் நடித்திருந்த 'அரசு', 'சத்ரபதி' ஆகிய படங்களைத் தொடர்ந்து ஆர்.பி. சவுத்திரியின் ஆசி பெற்ற 'ஜே.ஜே குட்பிலிம்ஸ்' சார்பில் பாபுராஜா தயாரிக்கும் படம் 'நினைத்து நினைத்துப் பார்த்தேன்'. இதில் 'கற்க கசடற' விக்ராந்த, டெல்லி மாடல் அழகி ஆஷிதா, கருணாஸ், பொன்னம்பலம் உட்பட முன்னணி நட்சத்திரங்கள் பலர் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவு: மது அம்பாட், பாடல்கள்: நா.முத்துக்குமார், இசை: 'காதல்' ஜோஸ்வா ஸ்ரீதர். வசனம் பிரபல எழுத்தாளர் பாலகுமாரன். கதை, திரைக்கதை எழுதி மணிகண்டன் இயக்குகிறார். இவர் செல்வராகவன் இயக்கிய படத்தில் இணை இயக்குநராக பணிபுரிந்தவர்.



பாசக்கிளிகள்
பிரபு - மாளவிகா

# சினிமாச் சிதறல்



ஆஷிமா

## வில்லன் வேடத்தில் ரஜினி நடிப்பாரா?

## ~சத்யராஜ் எரிச்சல்!



ரஜினி நடிக்கும் 'சிவாஜி' படம் ஒவ்வொரு அடியாக முன்னேறி வருகிறது. முதலில் ரெக்னீசியன்கள் பட்டியலைத் தயாரித்த அப்படத்தின் இயக்குநர் ஷங்கர், அடுத்து நடிகர்கள் பக்கம் வந்திருக்கிறார். ஹீரோயின் விஷயத்தில் அவரா? இவரா? என்ற எதிர்பார்ப்புகளுக்கு முடிவு கட்டுகிற மாதிரி ஸ்ரேயாவை ஒப்பந்தம் செய்தவுடன் பத்திரிகைகளுக்கு அந்தச் செய்தியை தெரியப்படுத்தியதும் ஷங்கரே.

ஆனால் அவர் பத்திரிகைகளுக்கு தெரியப்படுத்த விரும்பாத இன்னொரு விஷயம் மெல்ல கசிய ஆரம்பித்திருக்கிறது.

இப்படத்தில் வில்லனாக நடிக்க சத்யராஜை அணுகினாராம் ஷங்கர். அவர் அலுவலகத்தில் இருந்து போனில் விஷயத்தை சொன்னதும் எரிச்சலடைந்த சத்யராஜ், "வேணும்னா என் படத்தில் வில்லன் வேஷம் ஒன்று இருக்கு ரஜினி நடிக்கிறாரா கேளுங்க" என்றாராம் அவரிடம்.

இப்போதும் ஹீரோவாக கலக்கிக்கொண்டிருக்கும் இவரைப் பார்த்து வில்லன் வேடத்தில் நடிக்க அழைத்தால் யாருக்குத்தான் கோபம் வராது என்கிறார்கள் சத்யராஜ் தரப்பில்.

சத்யராஜின் இந்தப் பதிலைத் தொடர்ந்து வழக்கம் போல் பிரகாஷ்ராஜை ஒப்பந்தம் செய்து விட்டார்கள் அந்த வில்லன் வேடத்திற்கு.

'வெற்றிவேல் சக்திவேல்' படத்தில் குஷ்பு காமெடியில் கலக்குகிறார்.

***

'பட்டியல்' படத்தில் பரத், ஆர்யா, பூஜா ஆகியோர் நடிக்கிறார்கள்.

***

சிம்ரன் மீண்டும் தமிழ் படங்களில் முக்கிய ஹீரோக்களுடன் நடிக்க முயற்சி செய்து வருகிறாராம்.

முதன் முதலாக ஒரு தெலுங்குப் படத்தில் நடிக்கிறார் நயன்தாரா. 'லஷ்மி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தப் படத்தில் அவரது ஜோடியாக வெங்கடேஷ் நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிக்க அவரது சம்பளம் எவ்வளவு தெரியுமா? ரூ.4கோடி!

***

சூர்யாவிடம் தற்போது ஒரு விசித்திர பழக்கம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதாவது மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்ட பிறகே வீட்டை விட்டு வெளியே வருகிறாராம்.

***

வடிவேலு அவரது நகைச்சுவை காட்சிகளை அமைப்பதற்காக சின்ன துணுக்குக் கிடைத்தாலும் 'கப்' என்று பிடித்து மனதில் பதிய வைத்துக் கொள்கிறாராம்.

## ...கலக்கும் 'விஜய் அம்மா'

பாடகி ஷோபா சந்திரசேகர் ஆக இருந்தவர். இப்போது நடிகர் விஜய அமமா என்ற புதிய அந்தஸ்து பெற்றுள்ளார். என்றாலும் அவரது இசைப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இவர் பாடிய கர்நாடகப் பாடல்கள் அடங்கிய இசை அல்பம் சமபத்தில் வெளியிடப்பட்டது.

ஏ.வி.எம். சரவணன் தலைமையில் நடந்த விழாவில் டைரக்டர் எஸ். ஏ. சந்திரசேகர் வரவேற்க 'ஷோபாவின் சமர்ப்பணம்' என்ற தலைப்பிலான சி. டியை வெளியிட்டார். அதை விஜய் பெற்றுக்கொண்டார்.


விஜய் பேசும்போது, "இப்படி ஒரு அம்மாவுக்கு மகனாகப் பிறந்த நான் அதிர்ஷ்டக்காரன். நான் வயிற்றில் இருக்கும்போதே அம்மா மேடையில் பாடிக்கிட்டு இருந்திருக்கிறாங்க. அதனால்தான் எனக்கும் பாடும் திறமை ...லும் தாளம் தப்பாமல் சுதியுடன் பாடுகிறான்" என்றார்.

...ம் குறித்து ஷோபா சந்திரசேகர் சொல்லும் போது...

...ர். ஆரம்பத்தில் மெல்லிசைப் பாடல்களைப் பாடினேன். என் இசை ஆர்வம் வளர ...க்கம் கொடுத்தார். பிறகு என் கணவரையும் குழந்தையையும் கவனித்துக் ...பாடுவதை விடும் நிலை ஏற்பட்டது. ஆனால் திரைப்படங்களில் பாடி வந்தேன். ...ம் கிடைத்தது.

...க இசை கற்றுக்கொண்டேன். தினமும் 3 மணி நேரம் பயிற்சி பெற்றேன். எனக்கு ...சை என்று வந்துவிட்டால் நேரம் போவது தெரியாமல் அதில் மூழ்கி விடுவேன். ...க ஒ...த்துப்...ல் பாடி இருக்கிறேன். கர்நாடக இசை விழா வில பாடவும் ...யில் பாட அழைத்தாலும் சென்று பாடத் தயாராக இருக்கிறேன். விஜய் ...' கொடுப்பேன்" என்றார்.

...பணம் சம்பாதிக்க வேண்டுமென்று முன்பு நினைத்தேன். ஆனால் என் மனைவி ...ழ்பெற வேண்டும் என்று இப்போது கடுமையாக உழைக்கிறார்கள்" என்றார்.



'மஜா'
விக்ரம் - அஸின்

# இரசிகர்களுக்கு பெருவிருந்து அளிக்கப்போகும்

# இலங்கை - இந்திய அதிரடிஆட்டம்

இந்தியாவுக்கு எதிராக எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 7 ஒருநாள் சர்வதேச போட்டி களில் இலங்கை அணி பங் கேற்கின்றது.

அண்மைக்காலமாக சிறப் பாக விளையாடிவரும் இலங்கை அணிக்கு மற்றொரு சவால் நிறைநத போட்டியாகும். இருந் தும் தோல்விகளால் துவண்டு போயிருக்கும் இந்திய அணி யில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன. அணித்தலைவர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்ட சௌரவ் கங்குலி அணியிலும் சேர்க்கப்பட வில்லை. அதற்குப் பதிலாக ராகுல ராவிட் அணித்தலை வனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக முன் னிலை வீரர்கள் சிலர் ஓய் வெடுக்க இளம் வீரர்களைக் கொணட இந்திய அணி நீண்ட காலத்திற்குப் பிறகு சச்சின் டெண்டுல்கர் மீண்டும் அணி யில் இடம்பெற்றுள்ளார்.

இவ்வாறான மாற்றங்களு டன் இந்திய அணி பலம் வாய்ந்த இலங்கை அணியினை எதிர் கொள்கின்றது.

இறுதியாக சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்புப் போட் டியின் இறுதிப்போட்டியில் நியூ சிலாநதிடம் படுதோல்வி, இலங் கையில் நடைபெற்ற முத்தரப் புப்போட்டிகளில் இலங்கை அணியிடம் படுதோல்வி போன்ற காரணங்களால் இந்திய அணி சற்றுத்தளர்வாகவே இருக் கின்றது. இருந்தும் நீண்ட காலத்திற்குப்பிறகு அணியில் சோக்கப்பட்ட 'மாஸ்டர் பேட்ஸ் மேன்' சச்ச'ன் டெணடுல்கர் அணிக்கு பெரும் துணையாக அமைந்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதி ரான முதல் இரு போட்டிகளுக் கான இந்திய அணியே அறி விக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட அணியில் உபதலை வராக வீரேந்திர சேவாக் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கேரளத்தைச்சேர்ந்த ஸ்ரீகாந் மட்டுமே புதிதாக அணியில் இடம் பெற்றுள்ளார்.

இலங்கை மற்றும் சிம்பாப் வேயில் நடைபெற்ற தொடர் களுக்கு சேர்க்கப்பட்டிருந்த இளம் வீரர்களான சுரேஸ் ராயீனா, ஆர். பி. சிங், வேனு கோபால் ராவ் ஆகியோருக்கும மீண்டும் வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. சமீபத்தில் முடிவ டைந்த சலஞ்சர் கிண்ணப் போட்டியில் இவர்களது ஆட் டம் சிறப்பாக் இருந்ததால் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

புதுடில்லியைச் சேர்ந்த கௌதம் காம்பீர் முதல் முத லாக ஒரு நாள் சர்வதேச போட்டியில் விளையாடும் வாய்ப் பினைப் பெற்றுள்ளார். மகேந் திரசிங் டோனி மட்டுமே விக் கற் காப்பாளர். அவருக்கு ஏதாவது பிரச்சினை என் றால் ராவிட் தான் அப்பணிக்கு துணை புரிய வேண்டும் சகீர் கான், ஆஷிஸ் நெஹ்ரா, முகமட் கைவ், லக்ஸ்மிபதி, பாலாஜி உள்ளிட்ட முன்னணி வீரர்கள் காயம காரணமாக அணியில் இடம் பெறவில்லை கடந்த மே மாதம முழங்கை யில் அறுவைச் சிகிச்சையினை மேற்கொண்ட சச்சின் டெண் டுல்கர் மீண்டும் அணியில் சேர்க் கப்பட்டுள்ளார்.

> "இந்திய அணி தனது உண்மையான திறனை வெளிப் படுத்தி ஆடினால் இலங் கைக்கு எதிராக நடைபெறவுள்ள தொடரை வெல்லும் என்று நம்புகிறேன்"
>
> ராகுல் ராவிட்

இதேவேளை இலங்கை அணி பெரிதாக மாற்றங்கள் ஏதும் செய்யப்படவில்லை இடது கைவேகப்பந்து வீச் சாளர் நுவான் சொய்ஸா அணிக்கு திருப்பி அழைக்கப்பட டுள்ளார். இவர் உட்பட 5 வேகப் பந்துவீச்சாளர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். பங் களாதேஸ¤க்கு எதிராக உள் ளூரில் நடைபெற்ற தொடரில் இருந்து கழற்றி விடப்பட்ட சொய்ஸா அதன் பிறகு நியூ சிலாந்து மற்றும் தென்ஆபிரிக் காவுக்கு எதிரான போட்டி களில் திறமையினைப் வெளிப் படுத்தி உடல் தகுதியினை நிரூபித்ததால் அணியில் மீண் டும் சேர்க்கப்பட்டுள்ளார். துடுப பாட்டத்தில் தொடர்ந்து பிர காசித்துவரும் சனத் ஜெய சூரியா, மாவன் அத்தப்பத்து, குமாா சங்ககார, மஹேல ஜெய வர்த்தன ஆகியோர் இந்திய பந்துவீச்சாளர்களுக்கு சுலப மாக முகம் கொடுப்பார்கள் என்பதால் அவர்களது துடுப் பில் இருந்து கணிசமான ஓட் டங்கள் குவியும் என எதி பார்க்கலாம். இவர்களைவிட ரஸல் ஆர்னல்ட், திலகரத்ன டில்ஸான், திலான் சமரவீர உபுள் சந்தான ஆகியோரும் பிரகாசிக்க கூடியதால் இலங்கை அணியின் பலம் மேலும் அதி கரிககும். அதேபோன்று பந்து வீச்சிலும் சமந்தவாஸ், நுவான் சொய்ஸா, பர்வேஸ் மஹ்ருப், தில்ஹார பெர்னாண்டோ, தில்ஹார லொகு ஹெட்டிகே ஆகியோர் வேகப்பந்திலும், முத்தையா முரளிதரன் , உபுள் சந்தான, சனத் ஜெயசூரியா ஆகியோர் சுழல் பந்திலும் சிறப் பான திறமையினை வெளிப் படுத்துவர்.

மறுமுனையில் இந்தியா அதன் அணித்தலைவர் சௌ ரவ் கங்குலியினை இழந்துள் ளது. இருந்தும் வீரேந்திர சேவாக், ராகுல் ராவிட், சச் சின் டென்டுல்கர், யுவ்ராஜ் சிங், மகேந்திர சிங் டோனி ஆகியோரின் அபாரமான துடுப் பாட்டத்தினை நம்பியுள்ளது. இந்திய பந்துவீச்சினைப் பொறுததவரை இர்பான் பதான், அஜித் அகார்கர், ஹர்பஜன் சிங், முரளிகார்த்திக் ஆகியோரே முன்னணி பந்துவீச் சாளர்களா வர் இவர்களைவிட சேவாக் டெனடுல்கர் ஆகி யோரும் பந்து வீசஉள்ளனர். அந்த வகை யில் இந்தியாவும் சம பலம் கொண்ட அணியா கவே காணபபடுகின்றது ஆனால் களத் தடுப்பில் இந் திய அணி பலம் குன்றிக காணப்படுவதால் இலங் கைக்கு சாதகமாக அமை கிறது. எவ்வாறாயினும் இரண்டு அணிகளிலும் அதிரடி ஆட்டக் காரர்கள் நிறைந்து காணப்படு வதால் இரண்டு அணிகளும் அதிரடிகளுக்கிடையிலான போட டியாக இது அமையும் என்ப தில் சந்தேகம் இல்லை.




> வாராவாரம் வெளிவரும் "சர்வதேச கிரிக்கெற் சபை"என்ற கிரிக்கெற் தொடர், இவ்வாரம் இடம்பெறும். "இரசிகர்க ளுக்கு பெரு விருந்து அளிக்கப்போகும் இலங்கை- இந்திய அதிரடி ஆட்டம் என்ற தொடர் காரணமாக இடம்பெறவில்லை. அததொடர் அடுத்த வாரம் முதல் தொடரும் என அறியத் தருகின்றோம்.

## இரு அணிகளும் இதுவரை...

* *பங்கு பற்றிய போட்டிகள்*

இரு அணிகளும்

இது வரை 1979ஆம் ஆண் டிலி இருந்து ஒன்றையென்று எதிர் கொண்டு வருகின்றன.

> "இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள் வது கடினமான விடயமாகும். எனினும் முழுப்பலத்தையும் வெளப்படுத்தி சிறப்பாக ஆடி வெற்றி பெற முயற்சிப்போம".
>
> மாவன் அத்தப்பத்து

அதன படி இரு அணிகளும் 82 போட்டிகள'ல பங்கேற்றுள் ளன. இதில் இந்திய அணி 41 போட்டிகளிலும் இலங்கை அணி 34 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 7 போட் டிகளின் முடிவுகள் அறிவிக் கப்படவில்லை.

இந்தியாவில் நடைபெற்ற 26 போட்டிகளில் இந்திய அணி 17இலும், இலங்கை அணி 8 இலும் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கையில் நடைபெற்ற 33 போட்டிகளில் இலங்கை அணி 19இலும் இந்திய அணி 9இலும் வெற்றி பெற்றுள்ளன.

இதேவேளை, பிறிதொரு நாடுகளில் நடைபெற்ற 23 போட் டிகளில் 15 இல் இந்தியாவும் 7இல் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன.

* ***250 ஓட்டங்களுக்கு மேல்***

----இலங்கை--------

302-4 கொழும்பு 1997
301 கொழும்பு 1998
299-5 சாஜா 2000/01
295-5 கொழும்பு 2001
294-5 சாஜா 2000/01
289-7 மும்பை 1986/87
282-4 தம்புள்ளை 2004
281-9 கொழும்பு 2005
277-8 டில்லி 1982/83
276-8 டாஹா 2000
272-4 டில்லி 1995/96
271-6 டாஹா 1988/89
267-9 கொழும்பு 2004
264 கொழும்பு 1997
251-8 கல்கத்தா 1995/1996

-----இந்தியா-----

373-6 ரவுண்டன் 1999
307-6 கொழும்பு 1998
304 பிறிஸ்டல் 2002
300-7 கொழும்பு 1997
299-4 மும்பை 1986/87
296-4 கொழும்பு 1999
292-6 ஜொனெஸ்பார்க் 2002/03
291-9 கொழும்பு 1997
287-4 நாக்பூர் 1998/99
286-6 பூணா 1998/99
281-4 டில்லி 1982/83
271-3 டில்லி 1995/96
271-6 கொழும்பு 2004
270-8 தம்புள்ளை 2004
269-7 அம்றிஸ்ரார் 1982/83
263-9 கொழும்பு 2005
255-8 கொழும்பு 1997
254 டாஹா 1988/89

*** 150க்கு குறைந்த மொத்த ஓட்டஎண்ணிக்கை**

----இலங்கை---

96 சாஜா 1983/84
98 சாஜா 1998/99
109 ஜொனஸ்பார்க் 2002/03
141 வடோ டாஹா 1986/87

இந்தியா

54 சாஜா 2000/01
78 கான்பூர் 1986/87
136 மார்க்கோ 1990/91

*** பெறப்பட்ட சதங்கள்**

இலங்கை

சனத் ஜெயசூரியா-189, 151*,130,120*,105
அர்ச்சுண ரணதுங்க-131*
மஹேல ஜெயவர்த்தன- 128
எல். டயஸ் -121,102
மாவன் அத்தப்பத்து- 118, 102*
அரவிந்த டி சில்வா -105, 104,104

இந்தியா

சௌரவ் கங்குலி- 183, 130*, 113,109
ராகுல் ராவிட்- 145,116
சச்சின் டெண்டுல்கர்- 137,128, 120,113,112*, 110,101
முஹமட் அஸாருதின்- 111*,108*,108
அஜெய் ஜடேஜா- 119,103*
சித்து- 108,
ரவிசாஸ்த்திரி- 101*
றொபின் சிங் -100

***பந்துவீச்சு (5விக்கற்றுக்கு மேல்)**

இலங்கை

முத்தையா முரளிதரன் 7-30
சமந்த வாஸ் 5-14
எவ் . லபோபார்டோ 5-57

இந்தியா

ஆஷிஸ் நெஹ்ரா 6-59
றோபின்சிங் 5-22/5-31
ஜவகல் சிறிநாத் 5-24
எம். பிரபாகர் 5-35

**சிறந்த இணைப் பாட்டம**

1St 137 சனத்ஜெயசூரிய & மாவன் அத்தப்பத்து கொழும்பு (1997)
2nd 170 வெற்றிமணி &எல். டயஸ் டெல்லி (1982/83)
3rd 226 மகேல ஜெயவர்த்தன &மாவன் அத்தபத்து சாஜா (2000/01)
4th 116 குமார் சங்ககார & மஹேல ஜெயவர்த்தன தம்புள்ளை (2004)
5th 166 சனத் ஜெயசூரிய& ரஸல் ஆ்னல்ட் சாஜா2000/01)
6th 132 அர்ச்சுன ரணதுங்க &எஸ். கல்பகே- ஹதராபாவத் (1993/94)
7th 126 மஹேல ஜெயவர்த் தன& உபுள் சந்தனா தம்புல்லை (2005)
8th 49 குமார் தர்மசேன & எஸ். பெரேரா கொழும்பு (2001)
9th 40 எல். டீ மேல் & அர்ச் சுணறணதுங்க கான்பூர் (1986/1987)
10th 31 முத்தையா முரளதரன் & 6 பெர்னாண்டோ ஜொனெஸ்பார்க் (2002/03

இந்தியா

1St 252 சச்சின் டெண்டுல் கர் & சௌரவ் கங்குலி கொ்ழும்பு 1998
2nd 318 ராகுல் ராவிட் & சௌரவ் கங்குலி ரவுண்டன் 1999)
3rd 175 சித்து & முகமட் அஸாருதின் சாஜா

**நோயல்**

(1994/95)
175 சச்சின் டெண்டுல்கர் & முகமட் அஸாருதின் டெல்லி (1995/1996)
4th 125 குறாஷியா & அஜெய் ஜடேஜா புணா (1998/99)
5th 223 அஜெய் ஜடேஜா & முகமட் அஸாருதின் கொழும்பு (1987)
6th 74 சச்சின் டெண்டுல்கர் & முகமட் கைவ் பிறிஸ்ரல் (2002)
7th 77 எச் வடானி & வி. டா கியா சாஜா 2000/01
8th 55 சித்து & ஹவகல் சிறிநாத் சிங்கப்பூர்/ 1995/1996
9th 46 ஹர்பஜன் சிங் & சகீர்கான் கொழும்பு (2004)
10th 17 அனில் கும்ளே & ஆஷிஸ்நெஹ்ரா கொழும்பு (2005)

(நாளை தொடரும்)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு-2005

202.யா/யா/3881திரு. பரமநாதன் குணசேகரம்
203.யா/யா/3893திரு. தில்லைவணம்பிள்ளை சங்கரலிங்கம்
204.யா/யா/3896திருமதி. பத்மாவதி சின்னத்துரை
205.யா/யா/3902திரு. சவிரிமுத்து இம்மனுவல் ஆனந்தராசா
206.யா/யா/3905திரு. ஐயாக்குட்டி நவரத்தினம்
207.யா/யா/3917திரு. முருகர் தம்பித்துரை
208.யா/யா/3936திரு. சித்தன்செட்டியார் நடராஜன்
209.யா/யா/4020திருமதி. இராசலட்சுமி சந்திரசேகரம்
210.யா/யா/4079திரு. கந்தையா கணேசமூர்த்தி
211.யா/யா/ 4121திருமதி. அன்னலெட்சுமி இரத்தினசபாபதி
212.யா/யா/4144திரு. சின்னத்துரை இம்மனுவேல்
213.யா/யா/4162திருமதி. பேர்லி பிரான்சிஸ்
214.யா/யா/4164திரு. சுவாம்பிள்ளை அடைக்கலம்
215.யா/யா/4195திரு. இளையதம்பி நாகலிங்கம்
216.யா/யா/4197திருமதி. திரேசம்மா வஸ்தியாம்பிள்ளை
217.யா/யா/4199திருமதி. றீற்றா பொனிபஸ்
218.யா/யா/4207திரு. மனியல் கிறிஸ்ரி ஜீவரெட்ணம்
219.யா/யா/4228திரு. நாகன் யேசுதாசன் தம்பிப்பிள்ளை
220.யா/யா/4249திரு. ஞானப்பிரகாசம் அருளானந்தம்
221.யா/யா/4253செல்வி. நிர்மலா லூயிஸ்
222.யா/யா/4283செல்வி. றீற்றா ஞானப்பிரகாசம்
223.யா/யா/4357திருமதி. றூபி மொனிக்கா லியோ
224.யா/யா/4415திரு. மனுவல் பிரான்சியஸ் சேவியர்
225.யா/யா/4434திரு. மனாசை டேவிட் தம்பிராஜா
226.யா/யா/4452திரு. சுப்பையா சண்முகவேல்
227.யா/யா/4466திருமதி. செல்வம் நவமணி
228.யா/யா/4468திருமதி. தேவகரம் முத்தையா
229.யா/யா/4495செல்வி. கௌரி சுப்பிரமணியம்
230.யா/யா/4496திருமதி. செல்வராணி சிவசிதம்பரநாதன்
231.யா/யா/4513செல்வி. தையல்நாயகி சின்னையா
232.யா/யா/4538திரு. மைக்கேல் யேசுதாஸ்சன்
233.யா/யா/4544திருமதி. சிசிலியா பாக்கியநாதன்
234.யா/யா/4547திரு. இம்மனுவல் திருச்செல்வம்
235.யா/யா/4559திரு. சிமியோன் அருளப்பு
236.யா/யா/4564திருமதி. காமாச்சி அந்தோனி
237.யா/யா/4597திருமதி. விஜயலட்சுமி கந்தையா
238.யா/யா/4600திருமதி. மருக்கொழுந்து கனகரெட்ணம்
239.யா/யா/4618திரு. கந்தன் சதாசிவம்
240.யா/யா/4658செல்வி. மேரிஅக்னெஸ் லோப்பையா
241.யா/யா/4681செல்வி. குமரேஸ்வரி ஞானசுப்பிரமணியம்
242.யா/யா/4685திருமதி. சேதுப்பிள்ளை திருநாவுக்கரசு
243.யா/யா/4729திருமதி. றீற்றா புஸ்பரட்ணம் பெஞ்சமின்
244.யா/யா/4736திரு. கந்தையா ஞானகணேசன்
245.யா/யா/4770திருமதி. ரெஜினா பர்ணாந்து
246.யா/யா/4771திரு. குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை
247.யா/யா/4793திரு. தனுக்கோடி குணரத்தினம்
248.யா/யா/4816திரு. சுந்தரம் திருஞானசம்பந்தர்
249.யா/யா/4825திரு. வேலுப்பிள்ளை கண்ணுத்துரை
250.யா/யா/4831திரு. குறுஸ்டர் யோசப் பொன்னையா
251.யா/யா/4853திருமதி. கமலாதேவி சிறீனிவாசன்
252.யா/யா/4868திருமதி. தனலட்சுமி கோபாலசாமி
253.யா/யா/4901திருமதி. மரியம்மா அன்ரனி
254.யா/யா/4904திரு. பிச்சைமுத்து செபமாலை
255.யா/யா/4905திருமதி. சிசிலியா நவரெட்ணராசா
256.யா/யா/4914திருமதி. மற்றில்டா பொன்தவம் அல்பிறட்
257.யா/யா/4918திருமதி. புஸ்பம் சிறில்
258.யா/யா/4935திருமதி. இரட்டினஜோதி தியாகராஜா
259.யா/யா/4963திரு. விசேந்தி அந்தோனிப்பிள்ளை
260.யா/யா/4966திருமதி. செபஸ்தியம்மா பத்திநாதர்
261.யா/யா/4971திரு. மளக்கியாஸ் எட்வேட்
262.யா/யா/4980திரு. ஆறுமுகம் தற்பரன்
263.யா/யா/4994திருமதி. சரோஜினி சபாபதிப்பிள்ளை
264.யா/யா/5000திரு. செல்லப்பா அப்பாப்பிள்ளை
265.யா/யா/5040திரு. சுவாம்பிள்ளை சின்னராசா
266.யா/யா/5045திரு. அல்பிரட் சிங்கராயர் மாட்டீன்
267.யா/யா/5056திருமதி. இராஜேஸ்வரி இராஜகாந்தி
268.யா/யா/5065திருமதி. இரத்தினம் வேலாயுதம்
269.யா/யா/5079திருமதி. மரியம்மா பேதுறுப்பிள்ளை
270.யா/யா/5089திருமதி. மேரிலூர்து குணரத்தினம்
271.யா/யா/5104திரு. குமார் பாலசுப்பிரமணியம்
272.யா/யா/5131திருமதி. கிருஷ்ணம்மா கிருஷ்ணசாமி
273.யா/யா/5215திருமதி. குணபாலலெட்சுமி சண்முகநாதன்
274.யா/யா/5256திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்
275.யா/யா/ 5267திரு. ஆசீர்வாதம் அலெக்ஸாண்டர்
276.யா/யா/5277திரு. முத்தையா நமசிவாயம்
277.யா/யா/5322திருமதி. நல்லம்மா குமாரசாமி
278.யா/யா/5330திருமதி. கேட்றுட் வரப்பிரகாசம்
279.யா/யா/5337திருமதி. சரஸ்வதி தெய்வேந்திரம்
280.யா/யா/5358திரு. முத்தையாத்தேவர் சங்கரலிங்கம்
281.யா/யா/5359திருமதி. மேரிறீற்றா சாந்தவதி சண்முகம்
282.யா/யா/5368திருமதி. பிலோமினா அந்தோனிப்பிள்ளை
283.யா/யா/ 5372திருமதி. மாகிறேற் ஜோசப்
284.யா/யா/5389திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வரெட்டிணம்
285.யா/யா/5432திருமதி. யோகேஸ்வரி இராசரெத்தினம்
286.யா/யா/5433திரு. எட்வேட் திரேசம்மா
287.யா/யா/5483திருமதி. பிலோமினா செபமாலை
288.யா/யா/5500திருமதி. அன்னலட்சுமி தியாகராசா
289.யா/யா/5533திரு. நன்னித்தம்பி சின்னத்துரை
290.யா/யா/5549திரு. வைரவி தெய்வேந்திரம்
291.யா/யா/5555திருமதி. மாகிறேற் அலெக்ஸ்சாண்டர்
292.யா/யா/5573திரு. செல்லர் தவஞானம்
293.யா/யா/5607திரு. மத்தியாஸ் லோறன்ஸ்
294.யா/யா/5608திருமதி. மரியநாயகி மரியதாஸ்
295.யா/யா/5611திரு. அகஸ்ரீன் யோசப்
296.யா/யா/5615திருமதி. வினிபிறெட் மனுவேற்பிள்ளை
297.யா/யா/5621திரு. வீரகத்தி இராசதுரை
298.யா/யா/5628திருமதி. தங்கம்மா சின்னத்துரை
299.யா/யா/5649திருமதி. சொர்ணம் கனகரத்தினம்
300.யா/யா/5662திருமதி. திலகவதி செல்வரத்தினம்
301.யா/யா/5670திருமதி. தங்கலட்சுமி சுப்பிரமணியம்
302.யா/யா/5706திரு. கந்தையாசின்னத்துரை நமசிவாயம்
303.யா/யா/5716திருமதி. லட்சுமி குமாரசாமி
304.யா/யா/5719திரு. கபிரியேல் செபஸ்தியாம்பிள்ளை
305.யா/யா/5744திரு. அந்தோனிப்பிள்ளை டேவிற்
306.யா/யா/5773திரு. அல்பிரெட் சின்னத்தம்பி தேவராஜன்
307.யா/யா/5781திருமதி. சீதா பொன்னுத்துரை
308.யா/யா/5791திருமதி. இராசமணி திரேசா பாக்கியநாதன்
309.யா/யா/5979திருமதி. சிவபாக்கியம் சிவப்பிரகாசம்
310.யா/யா/5997திரு. மாரிமுத்து சின்னராசா
311.யா/யா/6066திருமதி. தேசோவதி பரமானந்தம்
312.யா/யா/6070திரு. பொ. பிரான்சிஸ் இராஜசிங்கம்
313.யா/யா/6071திருமதி. கிரிஸ்தீன்னம்மா இன்பநாதன்
314.யா/யா/6079திருமதி. இராசம்மா கருப்பையா
315.யா/யா/6115திருமதி. அன்னம்மா மலக்கியாஸ்
316.யா/யா/6161திரு. ஜோன் அலோசியஸ் ராஜரட்ணம்
317.யா/யா/6220திரு. கனகரத்தினா அலோசியஸ்ஜெயராஜ்
318.யா/யா/6228திருமதி. நாகரத்தினம் சின்னத்துரை
319.யா/யா/6237திரு. நாகமணி தம்பிராசா
320.யா/யா/6267திரு. இராசையா திலகராசா
321.யா/யா/6268திருமதி. கிறிஸ்டபெல் அன்புமணி மகேசன்
322.யா/யா/6281திருமதி. தங்கரெத்தினம் பத்மநாதன்
323.யா/யா/6345திருமதி. அன்னம்மா யோசேப்
324.யா/யா/6405செல்வி. பொன்னம்மா சிதம்பரநாதர்
325.யா/யா/6433திருமதி. லில்லி மேரியம்மா பாக்கியநாதன்
326.யா/யா/6464திருமதி. மகேஸ்வரி செல்வராசா
327.யா/யா/6468திரு. கந்தையா குமாரகுலசிங்கம்
328.யா/யா/6473திருமதி. அன்னலட்சுமி கணேசன்
329.யா/யா/6479திரு. பெஞ்சமின் குணரட்ணம்
330.யா/யா/6538திருமதி. மகேஸ்வரி பரமநாதன்
331.யா/யா/6539திரு. முத்துக்குமாரசுவாமிஐயர் சந்திரகலாதரசர்மா
332.யா/யா/6550திருமதி. சின்னப்பிள்ளை ஜோசப்
333.யா/யா/6557திருமதி. சிவமணி நல்லையா
334.யா/யா/6606திரு. ஐயன் பிச்சன்

(தொடரும்)

# இடமாற்றத்தை ஏற்க மறுக்கும் ஊழியர்களுக்கெதிராக நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுக்கள் திணைக்களங்கள் என்பவற்றில் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் கடமையாற்றுவோரிடமிருந்து 2006ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்களை மாகாண பொது நிர்வாக அமைச்சு கோரியுள்ளது.ஒரு பிரதேசத்தில் அல்லது ஒரு திணைக்களத்தில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றிய அனைவரும் கட்டாய இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். இதேவேளை, ஒரு சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 2 வருடங்கள் சேவையையுடைய உத்தியோகத்தர்கள் தமது விருப்பத்திற்கமைய இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க முடியும் என மாகாண பொது நிர்வாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வசதியான நிலையத்தில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களும் கஷ்டமான சூழ்நிலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் சம வாய்ப்பை ஏற்படுத்தி உத்தியோகத்தர்களுக்கிடையே மன உளைச்சல் ஏற்படாதவகையில் இந்த இடமாற்றத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 5 வருட காலத்திற்குள் பல இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ள போதும அவற்றை ஏற்காது தொடர்ந்தும் ஒரு சேவை நிலையத்தில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்கள தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் திணைக்களத்தலைவர்கள் கோரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# சுகாதாரத்துறை ஊழியர்கள் 27 முதல் தொடர் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

ஊதிய உயர்வை ரத்துச் செய்த சுற்று நிருபத்தை விலக்கிக்கொள்ளாவிட்டால் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் நாடு தளுவிய ரீதியில் முழு அளவிலான வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கப்படும் என்று சுகாதார சேவையாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் பேசிய இச்சங்கத்தின் செயலர் ரவிகுதுதேஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வுக்கான சுற்று நிருபத்தை ரத்துச் செய்தது யார்? என்பது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசாரணை நடத்த வேண்டும்.ஊதிய உயர்வை ரத்துச்செய்ய சுற்று நிருபத்தை விலக்கிக்கொள்ளாவிட்டால் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கும் என்றார்.

இதேவேளை, சுகாதாரத்துறை சேவையாளர்கள் சில நாட்களுக்கு முன்பாக ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியதன் பின்னணியில் அரசியல் கட்சிகள் இருப்பதாக சுகாதாரத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்ததற்கும் தொழிற்சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. (ந)

# கிராம சேவகர் படுகொலை விசாரணைகள் தொடர்கின்றன

(கொழும்பு )

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட கிராமசேவகரின் கொலை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.கொலை செய்யப்பட்ட கிராம சேவகர் செட்டிக்குள பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கங்குளம் பகுதிக்கு கிராம சேவகராக சேவையாற்றி வந்தார்.

சம்பவதினம் அன்று இவர் தனது கடமையை முடித்துவிட்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-8)

# சச்சின் 23

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

ஒரு நாள் தொடரை 2-0என்ற கணக்கில் இந்தியா கைப்பற்ற டெஸ்ட் தொடரில் வென்று அதை நேர் செய்து விடுகிற வெறியுடன் கிரஹாம் கூச் தலைமையிலான இங்கிலாந்து அணி இலண்டன் நகருக்குப் பயணமானது. அங்கிருக்கும் லார்ட்ஸ் மைதானத்தில் இந்தியா- இங்கிலாந்து இடையிலான முதல் டெஸ்போட்டி !



முதல்டெஸ்ட் சச்சினுக்கு அவ்வளவாக கைகொடுக்கவில்லை. இரண்டு இன்னிங்கிஸ் களிலும சேர்த்தே மொத்தம் 37 ரன் கள் தான் எடுத்தான் இங்கிலாந்து கேப்ரன் ஹிராம் கூர்ச் முதல் இன்னிங்ஸில் 333 ரன்களும் அது போதாது என்று இரண்டா வது இன்ஸிங் சில் இன்னொரு சதமும் அடித்து இந்தியப் பவுலர்களைச் உச்சத்துக்கே தள்ள, அந்தப் போட்டியில் இங்கிலாந்து மிகச் சுலபமாக வெற்றி பெற்றது.

இங்கிலாந்துடன் ஒவ்வொரு முறையும் சச்சின் கவனமாகவும் நன்றாகவும் தான் விளையாடினான். ஆனாலும் ஏனோ, நீண்ட நேரம் தொடர்ந்து விளையாடவும் நிறைய ரன்கள் குவிக்கவும் முடியாத படி ஏதேனும் ஒரு பந்து அவனை ஏமாற்றி வீழ்த்திக்கொண்டிருந்தது.

இதை கவனித்த இங்கிலாந்து வீரர்கள், சச்சினின் அனுபவக்குறைவே அவனைத் தோற்கடிக்கிற ஆயுதம் என்று தீர்மானித்தார்கள். சச்சினின் முந்தைய புகழ் எல்லாமே ஒரு மாயத்தோற்றம் என்று முடிவு கட்டிய அவர்கள், ஒரு சின்ன மன அழுத்தத்தை அவனுக்குள் உண்டாக்கும்படி கடுமையாகப் பந்து விசினால் போதும் கவனம் சிதறி அவனாகவே ஆட்டம் இழந்து விடுவான் என்று நம்பினார்கள் .

அனுபவமிக்க இங்கிலாந்து வீரர்கள் சச்சினை இப்படிக் கணித்திருந்தது ஓரளவு நிஜம்தான் .முதல் சிலபோட்டிகளில் அவனுடைய ஆட்டத்தில் ஒரு குழப்பம் அல்லது தடுமாற்றம் இருந்தது உண்மையே. ஆனால் அது நிரந்தரமான குறைஇல்லை என்பதும் சச்சினின் பூரண விஸ்வரூபமும் விரைவிலேயே தெரியவந்தது .

1990 ஆகஸ்ட் 9 ஆம் திகதி மான்செஸ்டர் போட்டி தொடங்கியது . முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 519 ரன்கள் குவித்தது . தொடர்ந்து விளையாடிய இந்தியா வழக்கம் போல் தடுமாறி ஐம்பத்தேழு ரன்களுக்குள் பிரதான பேட்ஸ் மேன்கள் மூவரை இழந்து தத்தளித்தது. அஸாருதீன் மற்றும் மஞ்ச்ரேகர் நிதானமாக ஆடி ஸ்கோரை உயர்த்தினார்கள் சதம் அடிக்க ஏழுரன்கள் இருந்தபோது மஞ்ச்ரேகர் ஆட்டமிழக்க சச்சின் அஸாருதீனுடன் ஜோடி சேர்ந்த போது அணியின் எண்ணிக்கை 4விக்கெட் இழப்புக்கு 246 ரன்கள்.





இங்கிலாந்தின் மொத்த ரன்களில் பாதியை க்கூட இந்தியா அப்போது எடுத்திருக்கவில்லை. நிலைமையைப் புரிந்கொண்ட சச்சின் , தனது வழக்கமான ஆர்ப்பாட்ட அணுகு முறையைத் தவிர்த்து பொறுமையாக ஆடத் தீர்மானித்தான் அது மட்டுமில்லாமல் , அப்போது அவனுடன் விளையாடிய கேப்படன் அஸாருதீன் ஏற்கெனவே சதம்டித்து சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தார் அவரது வேகத்தை தடை செய்யாமல் மறு முனையில் நிதானமாக ஆடினான் சச்சின் .

நிதானம் என்றால் நாமெல்லாம் நினைப்பதைப் போல சாதாரண நிதானம் இல்லை அன்றைக்கு சச்சின் தனது முதல் ரன்னை எடுப்பதற்குள் கிட்டதட்ட ஒரு மணிநேரம் கடந்திருந்தது . சச்சினும் அசாருதீனும் ஐந்தாவது விக்கேட்டுக்கு 112 ரன்கள் சேர்த்தார்கள் அதில் சச்சின் எடுத்த ரன்கள் வெறும் 24 தான்! அற்புதமாகப் விளையாடி 179 ரன்கள் சேர்த்த அணித்தலைவர் அஸாருத்தீன் ஆட்டமிழந்த பிறகு மற்ற விக்கெற்றுகள் படபடவென சரிந்தன. கிட்டத்தட்ட 4 மணி நேரம் நிலைத்து நின்று பொறுப்போடு ஆடிய சச்சின் 68 ரன்களில் கடைசி ஆட்டக்காரனாக ஆட்டமிழந்தான். டெஸட் போட்டிகளில் சச்சின் 4ஆவது அரை சதம் இது!

(தொடரும்)

## மறவன்புலோவில் 450 ஏக்கர் வயல் நிலம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிப்பு






இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசமாக இருந்த தனங்கிளப்பு மறவன்புலோ பகுதியில் குறிப்பிட்ட ஒரு பகுதி நேற்று முன்தினம் பொதுமக்களின் விவசாய தேவைகளுக்காக கையளிக்கபட்டது. நீண்டகாலமாக அங்குள்ள வயல் நிலங்களில் எவ்விதமான விதைப்பும் செய்யமுடியாமல் வயல் நிலங்கள் பாவனையற்றுக் கிடந்தன இதனால் விவசாயிகள் பலர் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தன.

நேற்று முன்தினம் 450 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. கடந்த வருடம் யூலை மாதத்திலும் இதே போன்று குறிப்பிட்ட பிரதேசம் வயல் செய்கைக்காக விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் காலை 11.30மணியளவில் சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு அண்மையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இராணுவ மேஜர் பிரதிப்கமகே, பொலிஸ்மா அதிபர்பாமர் காமர் ( **Mine Action S.L.A**) அவர்களால் தென்மராட்சி பிரதேச செயலர் சிறினிவாசன் அவர்களிடம் வைபவரீதியாக இந்நிலம் கையளிக்கப்பட்டது. யாழ். மாவட்ட மிதிவெடி நடவடிக்கைகள் செயற்பாட்டு அலுவர் சே. டென்சன் தலைமையிலே இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 521வது பிரிகேற் தளபதி ஏ.எல்.டி.எம் குணசேகர யாழ். மாவட்ட மிதிவெடி அலுவலர் எல்மோ ஆனந்தராசா ஆகியோர் உட்பட மற்றும் பல அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். மேலும் ,விடுவிக்கப்பட்ட பிரதேசம் சம்பந்தமான விபரங்களை பெறுவதற்கு வசதியாக நாளை காலை 8.30மணியளவில் நுணாவிலில் இராணுவத்தினர் புதிதாக அமைத்துள்ள பாதையில்உள்ள இராணுவ முகாமிற்கு மீண்டும் வருகை தருமாறு அப்பகுதி விவசாயிகளை இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளனர். (ரு-108)





தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாவை வெட்டி செயலகத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

வீணாகப் புகழ்ச்சி செய்தல் கூடாது. உள்ளதை உள்ள படியே உரைக்கவேண்டும். அதிகாரவர்க்கம் ஒழிந்து ஜன நாயகம் ஏற்பட்ட உடனேயே வெறும் புகழ்ச்சியும் ஒழிந் திருக்கவேண்டும். - ராஜாஜி

வலம்புரி

# ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரைத்தான் நம்பமுடியும்!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 13 பேரில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மகிந்த ராஜ பக்ஷவிற்கும் இடையிலேயே போட்டி சூடுபிடித் துள்ளது.

இருவரில் யார் வெல்வார் என்ற கேள்வி யைத் தவிர ஏனைய வேட்பாளர்கள் பற்றிய ஆராய்வுகள் எதுவும் தேவையற்றவையாகவே உள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தேர்தல் களத்தில் உச்சமான போட்டியில் நின்றபோதிலும், இதில் யார் வெற்றி பெற்றால் தமிழ்மக்களுக்கு சாதகம் என்ற கேள்வி எழுமாயின் அதற்கான பதில் மௌன மாகவே இருக்கும்.

ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களை நம்பிக் கெட்டவர்கள் ஈழத்தமிழர்கள். தமக்கு ஆபத்து வந்தபோதெல்லாம் தமிழ்மக்களை பக்கத் துணையாக அழைத்த சிங்கள ஆட்சியாளர் கள் காலாகாலம் தமிழ்மக்களின் உரிமைக் குரலை நசுக்கவும் தவறவில்லை.

இவ்விதம் நம்பிக்கை மோசடி செய்ததன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியவேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆயுதப் போராட்டம் உச்சம்பெற்ற நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்தவேண்டும், சமாதான ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண் டும் என்றவாறு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

1983களில் தமிழ்மக்களுக்கு எதிரான வன் முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட ஐக்கிய தேசி யக் கட்சியே யுத்தநிறுத்த உடன்படிக்கையை யும் செய்தது.

1983 ஜூலைக் கலவரத்தில் சிங்கள இன வெறியாளர்களால் தமிழ்மக்கள் கொல்லப்பட்ட போது அதனைத் தடுத்துநிறுத்தாது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியாளர்கள் 2002 களில் விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன் படிக்கை செய்துகொண்டபோது அவர்கள் உண்மையான சமாதான விரும்பிகளாக மாறி யிருந்தார்களா என்றால் அதுதான் இல்லை.

விடுதலைப் புலிகளின் உச்சமான தாக்கு தல் திறன், உலகநாடுகளின் அழுத்தம் இவை காரணமாகவே ஐக்கிய தேசியக்கட்சி யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண் டது.

எனினும் அவர்களின் சமாதான முன்னெடுப் பில் ஓர் விசுவாசமான அர்ப்பணிப்பு இருக்க வில்லை. ஆக, யுத்தநிறுத்த உடன்படிக்கை யுடன் காலத்தைக் கடத்தி விடுதலைப் புலிக ளின் பலத்தை ஸ்தம்பிட வைப்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் உள்ளார்ந்தமாகும்.

இது ஒருபுறம், மறுபுறத்தில் பிரதமர் மகிந்த பற்றிக் கூறவே தேவையில்லை. அவர் யுத்த நிறுத்த உடன்படிக்கையையே போஸ்மோட்டம் செய்யக் காத்திருப்பவர்.

இவ்விதம் வேட்பாளர்களின் உள்ளார்ந்தம் இருக்கும்போது அவர்களில் யாரைத்தான் நம்பமுடியும்?

# பல்கலைக்கழக சுற்றாடலில் சுகாதாரச் சீர்கேடு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மேற்கு வளாக வீதிப்பகுதிகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதுடன், மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் நோய்பரவும் அபாயமும் ஏற்பட் டுள்ளது. இதுவிடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கு மாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

இதுவிடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கு மாறு மீண்டும் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ள னர். பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வளாகவீதி திருநெல்வேலி மேற்குப் பகுதியில் எமது வதிவிடங்களுக்கு அருகில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கழிவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி தீயிட்டு அழிப்ப தால் ஏற்படும் அசௌகரியங்கள் பற்றி நாம் பல தடவை கள் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம்.

ஆனால் இதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுத்த தாகத் தெரியவில்லை. மழைகாலம் நெருங்கிவருவதால் நாம் இதனால் பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உள்ளாகி யுள்ளதுடன், நோய்கள் பரவும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் எமது குடியிருப்புக்கள் நெருக்கமாகக் காணப்படுவதால் நோய்பரவும் வேகம் அதிகமாகக் காணப் படுகிறது. இப்பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்களும் செறிவாக குடியிருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பல்கலைக்கழக விடுதிகளும் அமைக்கப் பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி புகையிரதக்கடவைப் பகுதியில் விடுதிக் கழிவுநீர் தேங்குவதனால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புத் தொல்லை போன்ற பிரச்சினைகளும் தோன்றியுள்ளன.

இதுபற்றி பலதடவைகள் பத்திரிகை வாயிலாகவும் உரியவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் இது குறித்து எதுவித நடவடிக் கையும் எடுக்காமல் இருப்பதையிட்டு மிகவும் மனவருத் தம் அடைகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# விடுதலைப் புலிகளின் தலைவர்களை பிரான்ஸில் ஜனாதிபதி சந்திக்கவில்லை

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

பிரான்ஸ் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தாகக் கூறப்படுவதை ஜனாதிபதி செயலகமும் பிரான்ஸிற்கான இலங்கைத் தூதரகமும் மறுத்துள்ளன.

இது தொடர்பான செய்திகளை மறுத்த ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவின் இயக்குநர் எரிக்பெர்னாண்டோ பிரான்ஸில் எந்தவொரு அமைப்பினதும் தலைவர்களை ஜனாதிபதி மரியாதை நிமிர்த்தமாகவோ இரகசியமாகவோ சந்திக்கவில்லை என்று கூறியுள்ளார்.

பிரான்ஸிற்கான இலங்கைத் தூதர் சித்திரான்கனி வாகிஸ்வர இது குறித்துக் கூறுகையில் ,

பிரான்ஸில் சந்திரிகா குமாரதுங்க தங்கியிருந்தபோது பிரான்ஸ் அரசியல் தலைவர்களுடன்தான் இருதரப்பு உறவுகள் குறித்த பேச்சுக்களை நடத்தினார். இதற்கான ஏற்பாடுகளை இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் செய்திருந்தது என்றார். (ற)

# பிறர் மீது கொள்ளும் முழுமையான அன்பு எப்போதும் நிறைவான மகிழ்ச்சியை தரும்

## பரமபிதா காட்டிய பாதை

செல்வமகள் நிலக்ஷி



ஒன்றை நமதாக்கிக் கொள்ளவேண்டும் என்றால் எம்மிடம் உள்ள இன்னும் ஒன்றை இழந்தேயாகவேண் டும். இதுதான் நியதியா கும். மகிழ்ச்சியை அடைந்து கொள்ளவேண்டும் என்றால் எமது கவலைகளை எல் லாம் எம்மிடமிருந்து அகற் றியே ஆகவேண்டும். பரீட் சையில் சிறந்த பெறுபேறு பெறவேண்டுமென்றால் கண் விழித்து கஸ்ரப்பட்டு படித்தே ஆகவேண்டும். ஒன்றிற்கு தம்மை இழக்கும்போதே இன்னுமொன்றை அடைந்து கொள்ளமுடியும். தீர்க்கப்படாத பல குடும்பப் பிரச்சினைகள் ஒருவரின் இழப்பின்மூலம் சுலபமாக ஒற்றுமைக்கு வந்துள் ளதை நாம் கண்டுள்ளோம். இவ்வாறு இறையரசை அடைந்து கொள்ளும் பேறு ஏழைகளுக்கே உண்டு என்பதை இயேசு பெருமான் தெளிவாகக் கூறிவைத்துள்ளார். அதாவது ஏழை உள்ளங்கொண்டவர்களாக நாம் மாறாவிட்டால் விண்ண ரசை அடைந்து கொள்ளமுடியாது.

### அன்பு வாழ்வின் முழுமை

புனித பவுல் கூறுவதுபோல் இயேசுக் கிறிஸ்துவாகிய செல்வத்தை ஆதாயமாக்கிக்கொள்ள என்னிடமுள்ள எல்லா வற்றையும் குப்பை எனக் கருதுகிறேன் என்றார். எல்லாம் அறிந்திருந்த பவுலடியார் இயேசு கிறிஸ்து என்பது அன்பு. அன்பின் மொத்த உருவம் இயேசு. அன்பு வாழ்வே வாழ்ந் தார். இயேசு எங்கும் எதிலும் அன்பையே கடைப்பிடித்து வந்தார். இப்படியானவரைத்தான் சிக்க வைக்கவேண்டும் என்று கங்கணம் கட்டினார்.

சதியே பரிசேய குடும்பங்கள் அவர்களின் வாயைமூடச் செய்ய இயேசு கூறிய பதில் திருச்சட்டத்தில் தலைசிறந்த கட்டளை "உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோ டும், முழு மனதோடும உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து உன்மீது அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வாயாக" என்பது. இதற்கு இணையான இரண்டாவது கட்டளையென்று அன்பின் மகத்துவத்தை எடுத்துக்கூறினார் இயேசு பெருமான்.

### தூய உள்ளம் வேண்டும்

பிறர் மீது நாம் அன்பு செலுத்தவேண்டுமானால் எம்மிடம் உள்ள பல துர்க்குணங்களை நாம் விட்டுவிடவேண்டும். அப்போதுதான் பிறர் மேல் அன்புசெய்யும் விருப்பு உண் டாகும். எம்மேல் மாற்றம் ஏற்படும். மற்றவர்களை ஏற்றுக் கொள்ளும் மற்றவர்களை மதிக்கும் மனநிலை எம்மில் உருவாகும். இறைவனை ஆண்டவன் என்று ஏற்றுக்கொள் ளும் வாழ்க்கைநிலை எம்மில் ஆழப்படுத்தப்படும். தூய உள்ளம் படைத்தவர்களாக நாம் நாளாந்தம் மாற்றம் பெறுவோம். திருச்சட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் கடவுளையும் அதேவேளை பிறரையும் அன்பு செய்ய வேண்டும். ஏழைகளுக்குக் காட்டும் இரக்கமே இறைவன் விரும்பும் அன்பாகும். ஒவ்வொரு மனிதனும் தனக்காக வாழ்வதற்கன்று பிறருக்காகவே வாழப் படைக்கப்பட்டவன் என்பதை உணரும்போது பிரச்சினைகளுக்கே இடம் இல்லை.

### பிறரை அன்பு செய்தல்

பிறருடைய மகிழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் செல்வம் இரட்டிப்பு மகிழ்சியை உண்டாக்கும். பயன்படுத்துபவருக்கும் பயன்பெறுபவர்க்கும் மகிழ்ச்சி உண்டாக்கும் அழிந்துபோகும் செல்வத்துக்கு முதன்மையிடம் கொடுக்காது அழியாத செல்வமாகிய விண்ணக செல்வங்களைப் பெற்றுக்கொள்ள நாம் உழைக்கவேண்டும்.

பவுலடியார் கூறுவதுபோல் விசுவாசத்தோடு வாழ்ந்து நல்வாழ்வின் பரிசாகிய வெற்றிவாகைக்காக காத்திருப் பவர்களாக நாமும் வாழவேண்டும். குடும்ப வாழ்விலும் குழும வாழ்விலும் பாடசாலை வாழ்விலும் பங்கு வாழ்விலும், சமூக வாழ்விலும் அன்பை முதன்மைப்படுத்தி விட்டுக் கொடுத்து உதவிசெய்து பகிர்ந்து மன்னித்துவாழும்போது எம்மிடையேயும் இயேசுவின் காலத்தில் இருந்த அன்புச் சமூகம் உருவாகும்.

பிறருக்கு கொடுக்க பிறரை மன்னிக்க ஒவ்வொருவரும் முன்வரும் போது எம்மிடையே ஒற்றுமையும் அன்புறவும் உருவாகும். இதற்கான அருளை அளித்திட இறைவனிடம் உருக்கமாக இறஞ்சுவோம்.

### தினசரி தியானம்

**விவேகச் சிந்தனை**

**உயர்ந்த இலட்சியம் ஒன்றை உறுதியா கப் பற்றிக்கொண்டு உன் வாழ்வை அதற் காகவே விட்டுவிடு. இறப்பது உறுதி. ஒரு பெரிய நோக்கத்திற்கா உயிரைத் துறப்பது மிகமிக உயர்ந்தது.**

சுவாமி விவேகானந்தர்

# விடுதலைப் புலிகள் மீதான தடையை....

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நாடு சுதந்திரம்பெற்று அரை நூற்றாண்டுக்குப் பின்னும் உச் சக்கட்டத்தை அடைந்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்தேசியப் பிரச்சினைக்கு அமைதிவழியில் நியாயமான அர சியல் தீர்வு ஒன்றைக்காணுவதற் கான அனைத்துப் பாதைகளை யும் முற்றாக மூடியுள்ளது.

வரலாற்று ரீதியான பாரம்பரிய பூமியில் வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் ஒருங்கிணைந்து எமது அவலமானதும் ஆபத்தா னதுமான நிலையை சர்வதேசத் தின் முன்னால் வெளிப்படுத்த வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளோம்.

வெளிநாடுகள் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு முன்னர் தமிழ்பேசும் இனம் இலங்கை நாட்டில் தனிய ரசாக இருந்துள்ளது. ஆங்கிலே யர் ஒற்றையாட்சி அரசமைப்பினை திணித்தனர். அதன்மூலம் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது.

1948 இல் ஆங்கிலேயர் தாம் வெளியேறியபோது நாட்டின் ஆட்சி முறைமையை முழுமையாக பெரும் பான்மையான சிங்களவரிடம் கையளித்து விட்டுச்சென்றது.

இவ்வாறு முறையற்ற வகை யில் தாம் பெற்றுக்கொண்ட ஆட்சி முறையினை பயன்படுத்தி அதன் மூலம் பாராளுமன்றத்தில் கிடைத்த பெரும்பான்மையைப் பிரயோகித்து தமிழ்பேசும் மக்களின் மொழி, நிலம் ஏனைய சகல உரிமைகளையும் சிங்கள இனம் பறித்துக் கொண் டது.

எமது பாரம்பரிய வாழ்விடங் கள் திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்கள் மூலம் சின்னாபின்ன மாக்கப்பட்டது. மொழி உரிமை, கல்வி உரிமை ஆகியன மறுக்கப் பட்டதுடன் தமிழ்பேசும் மக்க ளின் வாழ்வுரிமையும் நில ஆக்கிர மிப்பினால் பறிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தின் தலைந கர் என்று தமிழ்பேசும் மக்களால் தீர்மானிக்கப்பட்ட திருகோண மலை மாவட்டத்தில் நாடு சுதந் திரம் அடைந்த பின்னர் ஏற்படுத் தப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் பாரம்பரிய பூமியில் தமிழ்பேசும் மக்கள் நிம்மதியாக அடிப்படைச் சுதந்திரங்களுடன் வாழமுடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றரை ஆண்டுகளாக நீடித்து வரும் யுத்தநிறுத்தம் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைக ளுக்கு ஏற்ப தீர்வுகாண உதவுவ தற்குப் பதிலாக சிங்கள பேரின வாத அரசியல் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை பலவீனப்படுத்து வதற்கும் தங்களின் நிலைப்பாட் டினை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அரை நூற்றாண்டு காலமான தமிழ்த்தேசிய இனத்தின் விடு தலை வேட்கையை சர்வதேச சமூகத்திற்கு உணரவைப்பதே திருகோணமலை தமிழ்த்தேசிய எழுச்சி நாளின் முக்கிய நோக்க மாக அமையும.

பேரினவாத அரசுக்கும் மற்றும் தீய சக்தியினதும் பசப்பு வார்த் தைகளுக்கு சர்வதேச சமூகம் மசிந்துபோகக்கூடாது என்பதை யும் திருகோணமலை எழுச்சி விழா வலியுறுத்தும்.

சட்ட ஆட்சியின் கூறுகளாக குற்றப்பத்திரிகை, விசாரணை, தீர்ப்பு என்பன எதுவும் இன்றி ஒருதலைப்பட்சமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக, திருகோண மலையில் கடல்தளம் அமைத்து பல்லாண்டுகளாகப் பயன்பெற்ற பிரித்தானியாவின் தலைமையில் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு எமது கண்ட னத்தைத் தெரிவிக்கின்றோம்.

எனவே தற்போது உருவாகி யுள்ள சமாதானத்திற்கு எதிரான சூழல் மாற்றப்பட வேண்டி[illegible] யின் ஐரோப்பிய ஒன்றியம் யதார்[illegible] நிலைமைகளைப் புரிந்துகொண்டு தனது அங்கத்துவ நாட்டு அரசி னால் விடுதலைப் புலிகளின் குழுக்கள் வரவேற்கப்படமாட் டார்கள் என்ற நிலைப்பாட்டினை மாற்றக்கோருவதுடன், எமது தாயக நிலத்தையும் கடலையும் யுத்த நோக்குடன் ஆக்கிரமித்து நிற்கும் அரச படைகள் அவற் றினை விட்டு உடன் வெளியேற வேண்டும் என்றும்,

எமது நிலத்தில் எமது பலத் தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ் நிலை உருவாகவேண்டும் என் றும் அந்த உன்னதமான உயர்ந்த சுதந்திர வாழ்வை நோக்கி த[illegible]ழ் மக்கள் அணிதிரண்டுள்ளே[illegible]ம் என்பதையும் இவ் எழுச்சிப்[illegible] கடனத்தின் மூலம் முன்வைக் கின்றோம் என அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4,8)

## யாழ்ப்பாண இராணுவத் தளபதியுடன்...

இதற்குப் பதிலளித்த யாழ். பிராந்திய இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோன் இதுகுறித்து கொழும்பில் உள்ள உயரதி காரிகளுடன் தொடர்புகொண்டிருப்பதாகவும் ஒருவாரகாலப் பகுதியில் இதற்கான முடிவினை தெரிவிப்பதாகவும் கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களும், சுனாமிப் பேரழிவின் பின்னர் கிடைத்த உதவி களை அடுத்து ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்குச் சென்றுவருவதனால் பருத்தித்துறையிலுள்ள வெளிச்ச வீட்டுக் கட்டடத் தொகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அகற்றி வெளிச்ச வீட்டினை புனரமைக்கவேண்டும் என்று விடுக்கப் பட்ட கோரிக்கையினை சாதகமாகப் பரிசீலிப்ப தற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித் துள்ளனர்.

அத்துடன் காங்கேசன்துறை, காரைநகர், கோவளம் ஆகிய இடங்களில் உள்ள வெளிச்ச வீடுகளை புனரமைப் பதில் தமக்கு ஆட்சேபனை இல்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக சம்பந் தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று சந்திப்பில் கலந்துகொண்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரி வித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து கூலர் ட்றக்குகள் எனப்படும் குளிரூட்டப்பட்ட வண்டிகளில் கொழும் புச் சந்தைக்கு கொண்டுசெல்லும் மீனை முக மாலை, ஓமந்தை ஆகிய இராணுவச் சோத னைச் சாவடிகளில் இறக்கி சோதனையிடுவதற் குப் பதிலாக பருத்தித்துறை மற்றும் காங்கேசன் துறைப் பகுதிகளில் இரண்டு வெவ்வேறு இட்ங்க ளில் இராணுவத்தினரின் முன்நிலையில் மீனை ஏற்றி வழியில் சோதனையின்றி கொண்டு செல் வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். (ச-4)

## பரந்தனில்....

விபத்து ஏற்பட்டது. இதில் மோட்டார் சைக்கிளில் பின்புறத்தில் இருந்த விநோத்ராம் உயிரிழந்துள் ளதுடன் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் படு காயமடைந்தார்.

இதேவேளை நேற்று 2 மணியளவில் ஆனை யிறவுக்கும் தட்டுவன்கொட்டிப் பகுதிக்கும் இடையே ஏ9 நெடுஞ்சாலையில் எதிர்எதிர் திசையில் வந்த லொறி ஒன்றும் பஸ் ஒன்றும் மோதி விபத்துக் குள்ளானது.

இதன்போது குறித்த ஊர்திகள் இரண்டும் கடு மையாகச் சேதமடைந்ததுடன் அவற்றின் ஓட்டு நர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விரு விபத்துக்கள் தொடர்பாகவும் தமி ழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (ச-4)

## ஓமந்தை செல்லும்...

அவர்கள் வாக்களித்த பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் ஓமந்தைக்கு மீண்டும் அழைத்துச் செல்லப்படுவார்கள். இவர்கள் எக்காரணம் கொண்டும் வவுனியா நகரத்துக்குச் செல்ல அனு மதிக்கப்படமாட்டார்கள் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ச-8)

## இராசி பலன்

23.10.2005

(ஐப்பசி 6, ஞாயிற்றுக்கிழமை)

சஷ்டி மாலை 6.02 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 10.01 மணிவரை

இராகுகாலம்- 4.32 - 6.02 மணிவரை

சுபநேரம் - 9.02 - 10.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய அனுகூலம், சகோதரர் உதவி. |
| இடபம் | மனோ சங்கடம், எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், குடும்பக்கவலை. |
| மிதுனம் | வரவேற்பு, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, புதிய சிந்தை. |
| கடகம் | சோம்பல்நிலை, வீண் அலைச்சல், வீண் பகை, தனவிரயம். |
| சிங்கம் | குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, போசனசுகம். |
| கன்னி | பிரபுத்தனம், சந்தோசம், பிறருக்கு உதவுதல், தொழில் நன்மை. |
| துலாம் | உத்தியோக பலிதம், நிர்ப்பந்த நிலை, பொருள்விரயம், வீண்பயம். |
| விருச்சிகம் | பொருள் விரயம், முழங்கால் வலி, வீண் பகை, காரியதாமதம். |
| தனுசு | மனோதைரியம், கீர்த்தி, முயற்சி கைக்கூடும், களஸ்திர நன்மை. |
| மகரம் | மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைக்கூடும், போசன சுகம், உற்சாகம். |
| கும்பம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பூர்வ புண்ணியகருமம், தன விரயம். |
| மீனம் | மனச்சஞ்சலம், காரிய இடையூறு, பணவிரயம், அஜீரண ரோகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்


திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு



☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.
தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467
(C-அ1699)



மனோகரா யாழ்.
பார்த்திபன் . லட்சுமிராய். வடிவேல் நடித்த



குண்டக்க மண்டக்க...
கா.நே.10.30.02.30.06.30.09.30(பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
ஆர்ஜா, சோனியா அகர்வால் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)
தீபாவளி வெளியீடு
அது ஒரு கனாக்காலம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார் (இரு வேடங்களில்)
நமீதா . வடிவேல் நடித்த
சாணக்கியா
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)



வாசிப்பு மாதம்
காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுணில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.
(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)
தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org
வாசியுங்கள் அகவிழி திறக்கும்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
C-அ 1755
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி



EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.